விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பதினாறு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 10 ஞாயிற்றுக்கிழமை (25.12.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 06




## யாழ்.நகரில் நேற்று மாலை பயங்கரம்

# இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் பெண் உட்பட ஐவர் ஸ்தலத்தில் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில் பொது நூலகத்திற்கு அருகில் ஒரு பெண் உட்பட ஐவர் இராணுவத்தினரால் சுட்டுக்கொல் லப்பட்டுள்ளனர். இராணுவத்தினர் மீது நேற்றுமாலை 5.30 மணியளவில் துப்பாக்கிப்பிரயோகம் செய்தவர்களை நோக்கி பதில் தாக்குதல் நடத்தியதில் அவர்கள் கொல்லப்பட்டதாக இராணுவப்பேச்சாளர் தெரிவித்தார். சடலங்களுக்கு அருகில் சில ஆயுதங்கள் கரணப்பட்டதாகவும் இறந்தவர்கள் குறித்த விபரம் எதுவும் தெரியவில்லையெனவும் யாழ்.பொலிஸார் நேற்று இரவு தெரிவித்தனர்.

இதேவேளை நேற்றிரவு 9 மணியளவில் சம்பவ இடத்திற்குச் சென்ற மல்லாகம் மாவட்ட நீதிவான் சறோஜினி இளங்கோவன் சம்பவ இடத்தைப் பார்வையிட்டதுடன் சடலங்களை அடையாளம் காணும்பொருட்டு யாழ். போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினர் மீது பரவலாகத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

இருபாலை ,சாவகச்சேரி மற்றும் யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் நேற்று இராணுவத்தினர் மீது பரவலாகத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இருபாலைச் சந்திக்கு அண்மையில் மேற்கொள்ளப்ப்ட்ட கிரனைட் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார். இதனையடுத்து மக்கள் மீது இராணுவத்தினர் தடியடிப்பிரயோகம் மேற்கொண்டனர். கடைஉரிமையாளர் சிலரும் தாக்கப்பட்டனர்.

சாவகச்சேரியில் ஆங்காங்கே சில இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் மேற் கொள்ளப்பட்டதாக (14 ஆம் பக்கம் பார்க்க)

## ஐஸ்கிறீம் வான்மோதி சிறுவன் பரிதாப மரணம்

(சில்லாலை)

பண்டைத்தரிப்பில் நேற்று இடம்பெற்ற வாகனவிபத்தில் சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இச்சம்பவம்நேற்றுபிற்பகல்2.30மணிக்கு பண்டைத்தரிப்புச் சந்தியில் இடம்பெற்றது. ஐஸ்கிறீம் விற்பனை வானுடன் சைக்கிள் மோதியதாலேயே இச்சம்பவம் இடம் பெற்றது. இச்சம்பவத்தின்போது அதேஇடத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணக்கல்லூரி மாணவன் இந்திரஜித் தசாந் (வயது 13) என்ற சிறுவனே பலியானார்.

விபத்தில் காயமடைந்த சிறுவன் உடனடியாக (14 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழுவின் பணிகள் யாழ்ப்பாணத்தில் இடைநிறுத்தம் !

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இராணுவ வன்முறைகளும் அதற்கான எதிர்வினைகளும் அதிகரித்து வரும் நிலையில் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் தமது பணிகளை இடைநிறுத்தியுள்ளனர்.

கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர்களிடம் கண்காணிப்புக்குழுத்தலைவர் ஹக்றூவ் ஹொக்லண்ட் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ்ப்பாணத்தில் எமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப் படும்வரை பணிகளை இடைநிறுத்த யாழ். கண்காணிப்புக்குழுவினருக்கு அறிவுறுத்தியுள்ளோம்.

கடந்த வியாழக்கிழமை முதல் அங்கு கண்காணிப்புக்குழுவினர் தமது பணிகளை இடைநிறுத்தியுள்ளனர். டிசம்பர் 19 ஆம் திகதி யாழ்ப்பாண மாணவர்கள் அரச படையினர் மீது கற்களை மட்டும் வீசவில்லை. கண்காணிப்புக்குழு அலுவலகத்திற்குள்ளும் வலுக்கட்டாயமாக உள்நுழைய முயன்றனர்.

அதை அமைதியான ஊர்வலம் என்று அழைக்க முடியாது. (14 ஆம் பக்கம் பார்க்க)




# நோர்வேயிலேயே முதற்கட்டப்பேச்சு

## விடுதலைப்புலிகள் உறுதிபடத்தெரிவிப்பு

(கிளிநொச்சி)

அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையிலான நேரடிப்பேச்சுக்களின் முதற்கட்டப்பேச்சுக்களே அனுசரணையாளர்களாக ஏற்றுக்கொண்ட நோர்வேயிலேயே நடாத்த வேண்டும் என விடுதலைப்புலிகள் உறுதிபடத்தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற இணைத்தலைமை நாடுகளின் தூதுவர்களிடம் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவின் தலைவர் ஜீலியன் வில்சன் ;ஐக்கிய இராச்சியத்தின் உயர்ஸ்தானிகர் ஸ்ரீபன்ஈவன்ஸ் ;யப்பானிய இலங்கைக்கான தூதுவர் ஆக்கியோசூடா ;இலங்கைக்கான நோர்வேயின் பிரதித்தூதுவர் உட்வாலேக்ரீட் ஆகியோர் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

விடுதலைப்புலிகளின் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் நோர்வேயிலேயே முதல் கட்டப்பேச்சு விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் (12 ஆம் பக்கம் பார்க்க)

பிந்திய செய்தி

# ஜோசப் எம்.பி. சுட்டுக்கொலை



தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்டபாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் உப தலைவருமான ஜோசப் பரராஜசிங்கம் இன்று அதிகாலை 1.10 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் கிறிஸ்மஸ் ஆராதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

சூட்டிற்கு இலக்காகி படு காயமடைந்த எம்.பி.வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்ட போதே அவர் அங்கு மரணமானதாக தெரிவிக்கப்பட்டது. இத்தாக்குதலில் அவரது மனைவி உட்பட மேலும் பலர்படுகாயமடைந்துமட்டக்களப்புவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் . இச் சம்பவத்தையடுத்து மட்டக்களப்பில் பெரும் பதற்றம் நிலவுகிறது (சு)

உங்கள் காரியாலயத்தில், உங்கள் வீட்டில், நீங்கள் விரும்பிய இடத்தில்

- உலக சுகாதார விதிமுறைகளுக்கமைவான தயாரிப்பு முறை
- அதிநவீன தயாரிப்பு சாதனங்கள் மூலமான இரட்டிப்பு சுத்திகரிப்பு
- இலங்கை தரநிர்ணய உத்தரவாதம் SLS
- உங்கள் வாசல் வரையான இலவச சேவை

மேலதிக விபரங்களுக்கு

SWISS MINERAL

20 லீட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் 210/= மட்டுமே

Head Office
Gbn,posfach
8026 Zurich
Switzerland
Tel+412438259

Factory;
231, Temple Road,
Nallur, Jaffna.
Phone : 222 8122
0773126963

# யாழில் ஊடக சுதந்திரத்தை அரசாங்கம் ஒடுக்கி வருகிறது

## சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பு கண்டனம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் ஊடக சுதந்திரத்தை ஸ்ரீலங்கா அரசாங்கம் ஒடுக்கிவருவதற்கு சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஊடகத்துறையினரை அரசாங்கம் குறிவைத்துத் தாக்கிவருவதை அண்மைய நிகழ்வுகள் சுட்டிக்காட்டுகின்றன என்று அந்த அமைப்பு கூறியுள்ளது.

இராணுவத்தினரால் டிசம்பர் மாதம் தொடக்கத்தில் 3 ஊடகத்துறையினர் தாக்கப்பட்டனர் அதன் பின்னர் 3 ஊடகவியலாளர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் உரிய அடையாள அட்டைகள், ஊடகவியல்ாளர்கள், அட்டைகளை காட்டியபோதும அதை ஏற்காமல் அவர்கள் கைது செயயப்பட்டனர். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தலையீட்டுக்குப் பின்னரே அவர்கள் விடுக்கப்பட்டனர் என்றும் சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

'நமது ஈழநாடு' தமிழ் நாளிதழின் அலுவலகத்திற்குள் நுழைந்து இராணுவம் சோதனையிட்டுள்ளது. இந்த 3 சம்பவங்களும் யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களை ஸ்ரீலங்கா அரசாங்கம் இலக்கு வைக்கத் தொடங்கியுள்ளதையே காட்டுகிறது என்றும் கருத்துச் சுதந் திரத்தை முழுவதுமாகச் சிதைக்கின்ற நிலைமைதான் எதிர்காலத்தில் உருவாகும் என்றும் சர் வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பின் தலைவர் கிறிஸ்டோபர் வாரென் தெரிவித்துள்ளார்.

மேலும் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவிப்பதால் 4 தமிழ் நாளிதழ்களும் யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்திற்கு இலக்கு வைக்கப்பட்டுள்ளன என்றும் சர்வதேச கூட்டமைப்பு தனது அறிக்கையில் கூறியுள்ளது. (ற)

# சிங்கள இனவாதத்தின் இரத்தவெறிக்கு நாட்டை பலிகொடுக்கப் போகிறார்களா?

## -புதிய இடதுசாரி முன்னணி

(கொழும்பு)

'மஹிந்தவின் சிந்தனை' என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் காட்டுமிராண்டித்தனமான இனவாத நடவடிக்கைகளுக்கு எதிராக அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒன்று திரண்டுகுரல் கொடுக்க வேண்டும் என்று புதிய இடதுசரி முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பாக புதிய இடதுசாரி முன்னணி விடுத்துள்ள அறிக்கையில்,

'மஹிந்தவின் சிந்தனை' இனவாதிகளின் விருப்பத்திற்கமையவே செயற்படுத்தப்பட்டுள்ளது. இன்றைய ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு வைத்துள்ள பெயர் அந்நியர் என்பதாகும்.

ஆட்சியாளர்களின் மனதில் என்ன உள்ளது? என்பதை இதுவே எடுத்துக்காட்டுகின்றது. பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி, தெஹிவளை ஆகிய இடங்களில் தமிழ் மக்களை சல்லடை போட்டுத் தேடியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு 11 மணிமுதல் ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணிவரை நடைபெற்ற இந்த தேடுதல் நடவடிக்கைகளில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஊடகவியலாளர்கள் கூட கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீண்டும் வடபகுதிகளில் பாலியல் வன்புணர்வு, கொலைகள் தொடர்கின்றன. புங்குடுதீவுப் பகுதியினைச் சேர்ந்த இளைய தம்பி தர்சினி பாதுகாப்பு தரப்பினரின் காம இச்சைக்குப் பலியாகியுள்ளார். ஏற்கனவே கிருசாந்தி, ரஜனி, சாரதாம்பாள், கோணேஸ்வரி ஆகியோரின் பட்டியலில் தற்போது தர்சினியும் இணைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 20வருட கால யுத்தத்திற்கு ஒரு சமாதான வழியை ஆட்சியாளர்கள் ஏற்படுத்தப் போகின்றார்களா? அல்லது இனவாதத்தின் இரத்தவெறி அவாவிற்கு நாட்டைப் பலி கொடுக்கப்போகின்றார்களா?

இத்தகைய காட்டுமிராண்டித்தனங்களுக்கு எதிராக அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒன்றிணையவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## பாடசாலைகளின் ஆய்வு கூடங்களிலுள்ள

# காலம் கடந்த இரசாயனங்களை அகற்றுவதற்கு கல்வியமைச்சு முடிவு

(கொழும்பு)

நாட்டில் உயர்தரப் பாடசாலைகளின் விஞ்ஞான ஆய்வு கூடங்களில் வைக்கப்பட்டுள்ள காலம் கடந்த மற்றும் இனம்காணமுடியாத இரசாயனப் பொருட்களை ஆய்வு கூட்டங்களிலிருந்து அகற்றி விடுவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கென மத்திய சுற்றாடல் அமைச்சர்கள் இணைந்து விசேட் வேலைத்திட்டம் மேற்கொள்ளப் படவுள்ளதாக கல்வியமைச்சின் விஞ்ஞானப் பிரிவுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் பியந்த நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இனம் காணமுடியாத மற்றும் காலம் கடந்த இரசாயனப் பொருட்களினால் மாணவர்களின் ஆய்வு கூடநடவடிக்கைகளில் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறான இரசாயனப் பொருட்களினால் பாட[illegible]ஆய்வுகூடங்களில் பல்வேறு விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ள் அதேநேரம் இதனால் பல உயர் வகுப்பு மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து இவ்வாறான இரசாயனப் பொருட்களை சுற்றாடலுக்கு தீங்கு ஏற்படாத வகையில் பாதுகாப்பான முறையில் அழித்து விடுவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது. (ற-9)

# சமாதான நீதிவானாக பதவியேற்பு

(கற்கோவளம்)

அல்வாய் அத்தாயை வசிப்பிடமாகக் கொண்ட சபாரத்தினம் தெய்வேந்திரம் கடந்த 14ஆம் திகதி யாழ்.மாவட்ட நீதிமன்றில் யாழ்.மாவட்ட நீதிபதி திருமதி எஸ்.நந்தசேகரன் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் கணக்காய்வாளர் தலைமைஅதிபதிகள் திணைக்களம் மற்றும் அரச கரும மொழிகள் திணைக்களம் ஆகியவற்றில் பணியாற்றியுள்ளதுடன் தற்போது பருத்தித்துறை நகராட்சி மன்றத்தில் உள்ளூராட்சி திட்டமிடல் உத்தி யோகத்தராகக் கடமையாற்றி வருகிறார். இவர் ஒரு சிறந்த சமூக சேவையாளர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற-104)

# இராசி பலன்

25.12.2005

(மார்கழி 10, ஞாயிற்றுக்கிழமை)

நவமி பிற்பகல் 12.39மணிவரை

சித்திரை பின்னிரவு 6.07 மணிவரை

இராகுகாலம் 04.56 - 06.26 மணிவரை

சுபநேரம் 9.26 - 10.56 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தனவரயம், கல்வியில் ஆர்வம், மனச்சஞ்சலம், எடுத்த காரியம் தாமதாகும். |
| இடபம் | நற்கீர்த்தி, மனோதைரியம், காரிய நன்மை, கூடடு முயற்சி. |
| மிதுனம் | மனோசங்கடம், அதிக செலவு, ரோக நிலை, திடீர் நன்மை. |
| கடகம் | மாதர் நட்பு, ஏவகுமானம், நல்ல முயற்சி, தெய்வ சிந்தை. |
| சிங்கம் | உஷ்ண நிலை, பிறருக்கு உதவுதல், காரிய தாமதம், சுபசெலவு. |
| கன்னி | நண்பர்கள் சந்திப்பு, சயன சுகம், தனதானிய சேர்கை, ஆனந்தம். |
| துலாம் | ஆரோக்கியம், பெரியோரால் மதிக்கப்படுதல், காரிய சித்தி, நன்கொடை. |
| விருச்சிகம் | நிலைமாற்றம், புத்திரரால் கவலை, பிரயாணம், பணவிரயம். |
| தனுசு | அபகீர்த்தி, காரிய தடங்கல், தர்மம், போசன சுகம். |
| மகரம் | நல்ல முயற்சி, தன லாபம், உறவினர் சந்திப்பு, பிறருக்கு உதவுதல். |
| கும்பம் | காரிய அனுகூலம், கீர்த்தி, போசன சுகம், உற்சாகம். |
| மீனம் | தாழ்வு நிலை, முயற்சி தாமதம், தனவிரயம், போசன சுகம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

- வளவன்

# சந்திரிகாவினால் மீண்டும் தாமதமாக சென்ற விமானம்

(கொழும்பு)

முன்னாள் ஜானாதிபதி சந்திரிகாவுக்காக ஸ்ரீலங்கா ஏயார்லைன் விமானம் மீண்டும் தாமதமாகச் சென்றுள்ளதால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து கடந்த வியாழக்கிழமை காலை 8.50 மணிக்கு ஸ்ரீலங்கா ஏயார்லைன் யூ.எல்-501என்ற விமானம் இலண்டனை நோக்கி புறப்படவிருந்தது.

இதற்காக இலண்டனுக்குப் பயணம் செய்ய இருந்த பயணிகள் அனைவரும் அனைத்து சோதனைகளுக்கும் உட்படுத்தப்பட்டதன் பின்னர் அதிகாலை 5 மணிக்கு விமானத்திற்குள் ஏற்றப்பட்டுள்ளனர். இந்த விமானத்தில் சந்திரிகாவும் செல்ல இருந்தமையால் சந்திரிகாவுக்காக விமானம் காத்திருந்தது. விமானம் புறப்படவேண்டிய நேரத் துக்கும் மேலதிகமாக 30நிமிடமாகியும் விமானம் புறப்படாததால் பயணிகள், விமான நிர்வாகத்துடன் வாக்குவாதம் செய்தனர்.

வழமைபோல் சந்திரிகா தாமதமாக வந்த பின்பே விமானம் புறப்பட்டுச்சென்றது. கடந்த 13ஆம் திகதியும் சிங்கப்பூர் செல்லவிருந்த விமானம் சந்திரிகாவுக்காக ஒரு மணிநேரம் தாமதமாகப் புறப்பட்டு சர்ச்சைக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது.(ற-9)

# கழிவுப் பொருட்களால் பயணிகள் சிரமம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி, சாவகச்சேரி வடக்கு மருதடிச் சந்தியில் பெருமளவு கழிவுப்பொருட்கள் கொட்டப்படுவதால் அதன் ஊடாகப் பயணிப்போர் பெரும் அசெளகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

கட்டடக் கழிவுகள், ஓடுகள், தகரப்பேணிகள், பழைய உடுபுடவைகள், கண்ணாடித்துண்டுகள் உள்ளிட்ட கழிவுகளை உரப்பையில் கட்டி இரவு வேளைகளில் கொண்டு வந்து மேற்படி சந்தியில் போடப்படுவதால் இவை போக்குவரத்திற்கு இடையூறாகவுள்ளன.

இது தொடர்பில் சம்பந்தப்பட்டோர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென பாதிக்கப்படுவோர் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற-21)

# பிரிட்டன் - இலங்கை உடன்படிக்கை

(கொழும்பு)

சுனாமி புனரமைப்பு மற்றும் வறுமை ஒழிப்பிற்கான கடன் நிவாரணம் தொடர்பாக பிரிட்டனும் இலங்கையும் உடன்படிக்கை ஒன்றிற்கு வந்துள்ளன.

மொத்தக்கடன் நிவாரணம் சுமார் 45மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களாகும். இந்தக் கடன்தொகை எதிர்வரும் 10ஆண்டுகளில் திருப்பிச்செலுத்தப்படும்.

இந்த உடன்படிக்கை கைச்சாத்திடுவது குறித்து நிதியமைச்சின் செயலாளர் பி.வி.ஜயசுந்தர பிரிட்டன் உயர்ஸ்தானிகரை நேற்று முன்தினம் சந்தித்துள்ளார். (ற-7)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை வருடாந்த விளையாட்டுப்போட்டி நிகழ்வில் அதிபர் திருமதி. செல்வமலர் சுந்தரரேசன் தலைமைதாங்கி உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

(படம்:- பரு.நிருபர்)


# வேலை வாய்ப்பு-2005

1.பிரதேச செய்தியாளர்கள்(ஆண்கள்)
2.அலுவலகச் செய்தியாளர்கள்(இருபாலாரும்)
3.விளையாட்டுத்துறைச் செய்தியாளர்கள்(இருபாலாரும்)
4.உதவி ஆசிரியர்கள் (இருபாலாரும்)

கல்வித்தகைமை:-க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி

குறிப்பு:-பத்திரிகைத்துறை அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

5.பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (இருபாலாரும்)
6.சிற்றூழியர்கள்(இருபாலாரும்)
7.ஒவ்செற் பயிலுநர் (ஆண்கள் மட்டும்)

கல்வித்தகைமை:-க.பொ.த(சாதாரணம்)

விண்ணப்பிக்கும் பதவியுடன் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை,

நிர்வாக உத்தியோகத்தர், வலம்புரி,
இல.3, 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 31.12.2005க்குப் பிந்தாமல் அனுப்பி வைக்கவும்.

நிர்வாக உத்தியோகத்தர்.

## மட்டு. இல் சடலம் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நாவற்கேணிப் காட்டுப்பகுதியில் தாக்கியும் குத்தியும் கொலைசெய்யப்பட்டநிலையில் சடலமொன்றை பொலிஸார் நேற்று முன்தினம் மீட்டெடுத்துள்ளனர்.

இச சடலத்துடன் காணப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் உட்பட்ட ஆவணங்களின் பிரகாரம் இச் சடலம் கண்டியைச்சேர்ந்த மாரசிங்கமுதியன் சலாகே (வயது 30) என அடையாளம் காணப்பட்டார்.

பொதுமக்களின் தகவலையடுத்து இவரது சடலம் மீட்கப்பட்டதாகவும் இவர் தொடர்பான மேலதிக விபரங்கள் கிடைக்கவில்லையென்றும் மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-8)

# படையினர் மீதான தொடர் தாக்குதல்களால் போர்நிறுத்த உடன்படிக்கைக்கு பாரிய அச்சுறுத்தல்

## -க.கா.குழுத்தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட்

(கொழும்பு)

படையினர் மீது நடததப்படும் தொடர்தாக்குதல் மூலம் போர்நிறுத்த உடன்பாட்டிற்கு பாரிய அச்சுறுத்தல் எழுந்துள்ளதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் இதுகுறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த மூன்று வருடகாலத்தில் இது பாரிய பின்னடைவை ஏற்படுத்தும். மன்னார்க் கடலில் அனுமதியின்றி கடற்பயணம் மேற்கொண்டதன் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகள் போர்நிறுத்த உடன்பாட்டை மீறியுள்ளதாக அவர் குற்றம்சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர்நிறுத்த உடன்பாட்டின்படி இலங்கையின் கடல் எல்லையைப்பர்துகாப்பது இலங்கை கடற்படையினரின் பணியாகும். இந்த நிலையில் அந்தக் கடற்பகுதியில் பயணம் மேற்கொள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் அனுமதி பெறவேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், மன்னார் நகரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கடற்படையினர் மீதான தாக்குதலுக்கான பொறுப்புக்குறித்து சுமத்தப்படும் குற்றச்சாட்டை தமிழீழ விடுதலைப்புலிகள் மறுத்துள்ளனர்.

அரசாங்கம் இத்தாக்குதலுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளே காரணம் என்று குற்றம் சுமத்தியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலி



களின இவ்வாறான தாக்குதல்களின் மூலம் சமாதான முனைபபுககளை தகர்கின்ற போதிலும் தாம் சமாதான உறுதிப்பாட்டை விலக்கிக் கொள்ளப் போவதில்லை என்றும் அரசாங்கம் தெரிவித்துளளது. (ற-9)

# மன்னாரில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலுக்கு அரசு கடும் கண்டனம்

தலைமன்னாரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் 13கடற்படை வீரர்கள் கொல்லப்பட்டமை குறித்து அரசாங்கம் கடுங்கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்துக் கேள்விப்பட்டதும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாதுகாப்புச் சபையைக் கூட்டி பாதுகாப்பு நிலைமை குறித்து உன்னிப்பாக ஆராய்ந்துள்ளார்.

விடுதலைப்புலிகள் திட்டமிட்டு நடத்தும் இவ்வித மனிதாபிமானமற்ற தாக்குதல்கள் சமாதான நடைமுறைகளுக்கு குந்தகமாக அமையும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கில் அமைதியை நிலைநாட்டுவதற்கும் சமாதான நடைமுறைகள் குறித்து தென்னிலங்கையிலுள்ள சகல கட்சிகளுடனும் இணக்கப்பாடு ஒன்றிற்கு வருவதற்கும் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அரசாங்க தகவல் திணைக்களம் இதுகுறித்து விடுத்துள்ள அறிக்கையில்,

இத்தகைய தாக்குதல் சம்பவங்கள் இந்தக் காலகட்டத்தில் சமாதான முன்னெடுப்புக்களுக்கு முட்டுக்கட்டையாகவே அமையும். இத்தகைய வன்செயல்கள் மூலம் அரசாங்கத்தின் சமாதானத் திட்டத்தை ஒருபோதுமே அமுல் செய்யமுடியாமல் போய்விடும்.

சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடாத்தி சமாதான நடைமுடைமுறைகள முன்னெடுக்கப்படும். தலைமன்னார் சம்பவத்தில் உயிரிழந்த கடற்படை வீரர்களின் குடும்பங்களிற்கு அரசாங்கம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-7)

# ரூ.21 பில்லியன் திட்டக்கடனை மீளப்பெற்றது உலகவங்கி

(கொழும்பு)

உலக வங்கி இலங்கைக்குத் தருவதாக உறுதியளித்திருந்த சுமார் 21பில்லியன் ரூபா திட்டக்கடனை திரும்பப் பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நகர அபிவிருத்திகள் தொடர்பில் 64மில்லியன் டொலர்களும் மின்சார உற்பத்தித் தொடர்பில் 40 மில்லியன் டொலர்களும், அஞ்சல் துறை வளர்ச்சி தொடர்பில் 37.2 மில்லியன் டொலர்களும், தொகை மதிப்பிட்டு மேம்பாட்டுக்காக உறுதியளிக்கப்பட்ட 12.5 மில்லியன் டொலர்களும் இதில் அடங்கும்.

இந்தக்கடன் திட்ட உறுதியை உலகவங்கி ஏன் இலங்கைக்கு வழங்க மறுத்தது என்பது தொடர்பான காரணங்கள் எதுவும் வெளியாகவில்லை.

எனினும், ஏற்கனவே உலக வங்கியின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டிருந்த குறித்த கடன் திட்ட விபரங்கள்யாவும் இநத இணையத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-9)

# குடாநாட்டுக்கான பஸ்சேவை நேற்றிலிருந்து 7.30 மணிவரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இலங்கை போக்குவரத்து சபையின் அனைத்து பஸகளும் நேற்று முதல் இரவு 7.30 மணிவரை மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக இலங்கை போக்குவரத்து சபையின் யாழ்.சாலை செயலாற்று முகா மையாளர் சி.கமலநாதன் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் யாழ்.மத்திய பஸ்நிலையத்திலிருந்து குடா நாட்டின் அனைத்துப் பகுதிகளுககும் இரவு 8.15 மணிவரை பஸ்சேவை நடைபெற்றது. தற்காலிகமாக குடாநாட்டில் ஏற்பட்டிருககும் நிலைமையை கருத்தில் கொண்டு இச சேவை நேரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. (ற-9)

# இலங்கையின் வலைக்குள் விழ இந்தியா உடன்படக் கூடாது

## இந்தியப் பிரதமரிடம் வைகோ மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை



விடயத்தில் இந்தியாவை முனனிலைப்படுத்த இலங்கை முயல்வதாக தமிழ் நாட்டின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைவர் வை.கோபாலசாமி மீண்டும் குற்றம்சுமத்தியுள்ளார்.

இதற்கு இந்தியா உடன்படக்கூடாது என்றும் அவர் கோரியுள்ளார். புதுடெல்லியில் நேற்று முன்தினம் அவர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து இதுகுறித்து கோரிக்கை மனுவொன்றையும் கையளித்துள்ளார்.

இந்தியா தம்முடன் சிறந்த உறவுகளைக்கொண்டிருக்கின்றது என்பதைக் காட்டும் வகையில் அண்மையில் நடைபெற்ற இந்தியக்கடற்படையினருடனான பயிற்சிகளை இலங்கை அரசாங்கம் பிரசாரப்படுத்தியது.

போர்நிறுத்த உடன்பாட்டின் மீறல்கள் குறித்து தமிழீழ விடுதலைப்புலிகள் மீது இலங்கை அரசாங்கம் குற்றம் சுமத்திவருகின்றது. எனினும் அரசாங்கம் பாரிய போர்நிறுத்த மீறல்களில் ஈடுபட்டு வருகின்றது.

அண்மையில் யாழ்.பல்கலைக்கழக வளவுக்குள் இராணுவத்தினர் பிரவேசித்து மாணவர்கள் மீது துப்பாக்கிப பிரயோகம் செய்தமையானது கடந்த 10வருடங்களில் நிகழ்ந்த மிக மோசமான சம்பவமாகும்.

எனவே, இது தொடர்பில் இந்திய அரசாங்கம் உரிய கவனத்தை செலுத்தவேண்டுமென்று அவர் இந்தியப்பிரதமரைக் கோரியுள்ளார.

ஜனாதபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 27ஆம் திகதி இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ள நிலையில் வை.கோபாலசாமி இந்தியப் பிரதமரைச் சந்தித்தமை குறிப்பிடத்தக்கது. (ற-9)

# கல்வி நிர்வாகசேவை ஆட்சேர்ப்பு; திறந்த போட்டிப்பரீட்சை 28 இல்!

## யாழில் 2500 பேர் தோற்றுகின்றனர்

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான நாடளாவிய ரீதியிலான திறந்த போட்டிப் ப்ரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கபபட்டுள்ளது. இதற்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் , கொழும்பு ஆகிய நகரங்களில் அமைக்கப்பட்டுள்ள 184 பரீட்சை நிலையங்களில் 28 ஆயிரம் பேர் இந்தப பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் மாத்திரம் இப் பரீட்சையில் 2 ஆயிரத்து 500 போ 17 பரீட்சை நிலையங்களில் தோற்றவுள்ளனர் என்றும் ஆணையாளர் தெரிவித்துள்ளார் .

இதேவேளை , இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையை ஜனவரி 3 ஆம் வாரத்தில் நடத்துவதற்கான சகல ஒழுங்குகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ற-7)

# கூட்டமைப்பினர் - நிருபமாராவ் சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைபபினர் நேற்று முன்தினம் மாலை இலங்கைக்கான இந்தியத் தூதுவா நிருபமாராவை இந்தியத் தூதுவராலயத்தில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இச்சந்திப்பின் போது தற்போதைய நிலைமைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது . இனப்பிரசசினை தீர்வுக்கு உடனடியாக பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமென வலியுறுத்திய கூட்டமைப்பினர் பேச்சுவார்த்தைக்கு இந்தியா உதவவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டனர்.

இச்சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், சுரேஸ் பிறேமசசந்திரன், செல்வம அடைக்கல நாதன், மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம ஆகியோர் கலந்தது கொண்டனர்.

இதேவேளை, இந்தியத் தூதுவர் நேற்று முன்தினம் காலை ஜனாதிபதி மாஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியமை குறிப்பிடத்தக்கது (ற-9)

# வடக்கில் மேலதிகப்படையினர் உஷார்நிலையில்! - இராணுவப் பேச்சாளர்

(கொழும்பு)

வடக்கில்இடம் பெறும் எந்தவொரு வன்முறைச்செயலையும் எதிர் கொள்ளும் வகையில் படையினா இருப்பதாக புதிய இராணுவப் பேச்சாளர் பிரசாந்தி சமரசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கில் மேலதிகப் படையினர் உஷார்நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த சில தினங்களாக வடக்கு-கிழக்கில் இடம் பெற்ற சம்பவங்கள் புரிந்துணாவு ஒப்பந்தத்தை மீறும் செயற்பாடுகளாகும்.

இந்தச்சம்பவங்கள் குறித்து இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் விபரங்களை கேட்டுள்ளனர்.இந்த முறைபபாடு தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுதி வழங்கியுள்ளது .

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பை பலப்படுத்தும் நோக்கில் வீதித் தடைகளை ஏற்படுத்தி சோதனை நடவடிககைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்றும் புதிய இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-9)

# தேசியப் பாடசாலைகளில் மாணவர்கள் அனுமதி

## ஆராய விசேடகுழு நியமனம்

(கொழும்பு)

தேசியப்பாடசாலைகளில் இடைக்கால வகுப்புக்களில் மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான நடைமுறையை வகுப்பதற்காக விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் குழுவின் சிபார்சுகளுக்கு அமைவாகவே மாணவர்கள் இடைக்கால வகுப்புக்களில் அனுமதிக்கப்படுவார்கள் என கல்வியமைச்சர் சுசில் பிறேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

இந்தக் குழுவுடன் இணைந்ததாக பாடசாலை மட்டத்தில் உப குழுக்களும் அமைக்கப்படும் என அவர் கூறினார்.

2ஆம் தரத்திலிருந்து 5ஆம் தரம்வரையிலும் 6ஆம் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரையிலுமான வகுபபுக்களுக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான அங் கீகரிக்கப்பட்ட நடைமுறை எதுவும கிடையாது . எனவே மாணவர்களை அனுமதிப்பதற்கான கடிதங்கள் வழஙகப்படமாட்டாது எனவும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். (ற-7)

# கொலைகளை நிறுத்துங்கள்

அண்மைய நாட்களாக வடக்கிலும் கிழக்கிலும் படுகொலைகள் அதிகரித்து வருகின்றன. விடுதலைப்புலிகள், அரச படையினர், தமிழ் பொதுமக்கள், முஸ்லிம்கள் மற்றும் மாற்றுக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என நாள்தோறும் பலர் கொல்லப்பட்டு வருகின்றனர்.

கொலைகளை செய்பவர்களுக்கு அது மிக இலகுவான காரியமாக இருக்கலாம். ஆனால் ஒரு உயிரை பறிகொடுக்கின்ற அந்தக் குடும்பத்தினது நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களது துயரை எண்ணிப்பார்க்க வேண்டும். கொலையாகின்ற பலரைப்பார்த்தால் அவர்கள் திருமணம் செய்து மனைவி குழந்தைகளுடன் வாழ்ந்தவர்கள். அந்தக்குடும்பத்தினை காப்பாற்றியவர்கள். இவர்கள் கொல்லப்பட்ட பின்னர் அந்தக் குடும்பத்தின், கதியென்ன? மனைவியின் நிலையென்ன? எவ்விதம் அவர்கள் வாழமுடியும்? உணவுக்கு என்ன செய்வார்கள்? ஏனைய அத்தியாவசிய தேவைகளை எவ்விதம் பூர்த்தி செய்வார்கள்?

அக்குடும்பத்தின் குழந்தைகளை எடுத்துக் கொண்டால் தந்தை இல்லாத துயரை எவ்விதம் அவர்களால் தாங்கிக்கொள்ள முடியும்? தந்தையின் பாசத்தினை, பிரிவினை அவர்கள் வேறு எங்கு ஈடு செய்யமுடியும்? தந்தையின் இழப்பினை அக்குழந்தைகளால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? எல்லாவற்றிற்கும் மேலாக அக்குழந்தைகளுக்கு கல்வியை வழங்கி ஒரு நல்ல எதிர்காலத்தை காட்டுவது யார்?

மறுபுறம் கொலையுண்டவர்களின் தாய் தந்தைக்கு யார் ஆதரவு? வயதான காலத்தில் அவர்களுக்கு இந்த இழப்பு எவ்வளவு பெரிய தாக்கமாக அமையும்? மேலும் கொலையுண்டவர்களுக்கு சகோதர சகோதரிகள் இருந்தால் அவர்களுக்கு உதவுவது யார்? கல்வி கற்கின்றவர்களாக இருந்தால் தொடர்ந்து உதவுவது யார்?. சகோதரிகளது தேவைகளை பூர்த்தி செய்து அதிகளவில் சீதனம் எதிர்பார்க்கின்ற இன்றைய



சூழலில் அவற்றையெல்லாம் வழங்கி திருமணம் செய்து வைப்பது யார்?

இப்படி ஒரு உயிருக்கு பின்னால் ஆயிரமாயிரம் கடமைகளும், இழப்புகளும், துன்பங்களும் பின்னிப் பிணைந்துள்ளன. கொலை செய்பவர்களுக்கு இதுவெல்லாம் ஒரு பொருட்டேயல்ல. கொல்ல வேண்டும், ஆளை முடிக்க வேண்டும். அவ்வளவு தான். கொல்லப்படுவது தன்னைப்போன்ற இன்னுமொரு மனிதப்பிறவி தானே என்று சிந்திக்கக்கூட முடியாத அளவிற்கு கொலைவெறி மனிதத்தை மறைக்கின்றது.

கொலைக்கு பல காரணங்களை கூறலாம். எதிரி, மாற்றுக்கருத்துகளை உடையவர்கள், துரோகி இப்படிப்பல. ஆனால் அரசியல் ரீதியான அல்லது மாற்றுக்கருத்தியல் ரீதியான வேறுபாடுகளைக் கொண்ட ஒருவரை கொல்வது தானா தீர்வு?. மறுபுறம் மக்களது விடுதலைக்காக போனவர்களை பணம், சுகத்திற்காக எதிரிகளோடு சேர்ந்து கொலை செய்வது சரியானதா?

ஒவ்வொருவருக்கும் தாம் விரும்பிய ஒரு கொள்கையை கடைப்பிடிக்கும் உரிமை இல்லையா? அவ்விதமே அது மாறுபட்டதாயினும் கொலை என்பது ஒரு மிகப்பெரிய தண்டனை, அழிவு இல்லையா? கொலை செய்பவர் ஒரு கொள்கையை வைத்திருக்கலாம். அதற்கு மாற்றானவர்கள் இவரை கொல்ல முயற்சிக்கலாம். அல்லது இவர் மாற்றுக்கருத்துக்காரரை கொல்ல முயற்சிக்கலாம் அப்படியென்றால் இதன் முடிவுதான் என்ன?

கொல்லப்படுபவர் யாராக இருந்தாலும் அவர்

- சாதாரணன்

அரசனானாலும் ஆண்டியானாலும் விடுதலை வீரரானாலும், துரோகியானாலும், தமிழரானாலும், முஸ்லிமானாலும் அந்த குடும்பத்திற்கு கவலை, துயரம், இழப்பு ஒன்று தான். கண்ணீர் ஒன்றுதான். அழுகை ஒன்று தான். துப்பாக்கிகளுக்கு இவை புரிவதில்லை. அவற்றிற்கு தெரிந்தது கொலை மட்டுமே. அதன்பின் இன்னுமொரு கொலை. பின்னர் இன்னுமொன்று.

தற்போது கூட வடகிழக்கில் சில அரசியல்வாதிகள் இனக்கொலைகள், கலவரங்கள், வன்முறைகளுக்கு பின்னால் இருப்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தமது சுயநலத்திற்காக, பட்டம் பதவிகளுக்காக உயிர்களை பலியெடுக்கும் இவர்களுக்கு இருதயம் இரும்பால் செய்யப்பட்டதா? அல்லது சாகா வரம் பெற்றவர்களா?

எனவே யாராக இருந்தாலும், என்ன காரணமாக இருந்தாலும் கொலைகள் வேண்டாம். தயவு செய்து கொலைகளை நிறுத்துங்கள், மக்களுக்காக, மக்களது கண்ணீருக்காகதயவு செய்து கொலைகளை நிறுத்துங்கள்.




## வாசகர் கவனத்திற்கு...

கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன. அத்தோடு விழிப்பின் பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் விமர்சனங்களையும் நாங்கள் எதிர் பார்க்கிறோம்.

எழுதி அனுப்ப வேண்டிய முகவரி

விழிப்பின் பதிவுகள்
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713. டிபி. விஜயசிங்க மாவத்தை,
பெலவத்தை, பத்தரமுல்லை.
மின்னஞ்சல்முகவரி :- villippu@yatv.net

## அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

**உறுப்புரை - 08**

அவ்வந்நாட்டின் அரசியலமைப்பினால் அல்லது சட்டத்தினால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறும் செயல்களுக்காக தகுதி வாய்ந்த தேசிய நியாய சபைகளினால் வழங்கப்படும் பயனுறுதியுடைய பரிகாரத்திற்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவர்களாவர்.

**உறுப்புரை - 09**

ஒரு தலைப்பட்ட மனப்போக்கான வகையில் கைது செய்யப்படுதல், தடுத்து வைத்தல், நாடு கடத்தப்படுதல் ஆகியவற்றுக்கு எவரும் உட்படுத்தப்படலாகாது.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)

## சகோதர மொழியிலிருந்து சில துளிகள்

### துப்பாக்கியுடன் நான்

உங்களை குறிவைத்து
உங்களை அடக்கிவைத்து
உங்களை தடுத்து நிறுத்த
எனக்கு துப்பாக்கி தந்தனர்

இதில் எனக்கு உடன்பாடில்லை
என் பிரச்சினை வேறு
வீட்டில் வறுமை
கட்டிலில் அப்பா
கட்டிக்காக்கவேண்டிய
தட்டிக்கழிக்க முடியாத
குடும்பப்பொறுப்பு

ஏழை எனக்கு ஏது தொழில்
எல்லாம் அந்த
ஏமாற்று செல்வந்தர் கையில்

வருமானத்திற்காக
வந்தேன் படைக்கு - இப்போது
உங்கள் ஊரில்
உங்கள் எதிரியாக
துப்பாக்கியுடன் நான்

ரஞ்சன் ஜயரட்ண

## கருத்தாடல் களம்

### மலையக மக்களை கைவிடவில்லை.

மலையக மக்கள் குறித்து விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன என்ற கட்டுரையை விழிப்பின் பதிவுகளில் வாசிக்கமுடிந்தது. இதன் மூலம் மலையக மக்கள் எவ்வளவு தூரம் வடகிழக்கு மக்களையும் புலிகளையும் நம்பியுள்ளனர் என்பதை என்னால் விளங்கிக்கொள்ள முடிந்தது. ஆனால் விடுதலைப் புலிகள் சுயநலமாக தமது மக்களது விடுதலையை மட்டுமே நோக்காக கொள்வார்கள் என்று நான் நினைக்கவில்லை. சில அரசியல் கள நிலைமைகள் காரணமாக வெளிப்படையாக இது பற்றி கூறாவிடினும் நிச்சயமாக இல்லாமல் அவர்களது சிந்தனையில் இருக்கும் என்றே நான் நம்புகிறேன். அது மட்டுமல்ல வடகிழக்கு மக்கள் ஒருபோதும் மலையக தமிழ் மக்களை கைவிட மாட்டார்கள் என்பதை என்னால் உறுதியாக கூறமுடியும்.

ஆர். பிரதாபன்.
யாழ்ப்பாணம்.

### முஸ்லிம் சமூகம் செயற்படும்

கிழக்கு படுகொலை சம்பவங்களில் முஸ்லிம் அமைச்சர்களின் சம்பந்தமானது எங்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. கடந்த காலங்களில் முஸ்லிம்கள் மீதான வன்முறைக்கு எதிரான போராட்டங்களை நடத்திய முஸ்லிம் சமூகம் நிச்சயம் இந்த துரோகத்திற்கு எதிராகவும் செயற்படும். செயற்படவேண்டும் என்பதே எனது கருத்து.

ஏ.எம். முஹமட் இர்பான்
வாழைச்சேனை

### புலிகள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

முஸ்லிம் சமூகம் மீதான தாக்குதல்கள், வன்முறைகள் தொடர்பில் தற்போது புலிகள் ஓரளவு நம்பகத்தன்மையாக நடந்து கொண்டாலும் யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லிம்களை வெளியேற்றியது. கிழக்கில் படுகொலைகளை மேற்கொண்டது போன்ற காரணங்களினாலும் போரினால் முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றவகையிலும் அரசாங்கத்தைப் போலவே விடுதலைப் புலிகளும் முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பு குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும்.

ஐ.எம். நஸ்ரினா ஹக்
சம்மாந்துறை

## கண்டது.. கேட்டது.. படித்தது..

கலாநிதி சி. க. சிற்றம்பலம் எழுதிய

### யாழ்ப்பாண தொன்மை வரலாறு

என்ற நூலில் இருந்து

சிங்கள மக்களின் வரலாற்றினை அறிந்து கொள்வதற்குரிய இலக்கிய தொல்லியற் சான்றுகள் ஆராயப்பட்டது போல தமிழ் மக்களின் வரலாற்றினை விளக்கும் தொல்லியல் சான்றுகள் விரிவான முறையில் ஆராயப்படவில்லை.

இந்நாடு சிங்கள பௌத்தர்களுக்கே உரிய நாடு என்ற நோக்கில் எழுதப்பட்ட பாளி நூல்களிலே தமிழரின் வரலாற்றினை பற்றிய விரிவான தடயங்கள் காணப்படவில்லை. சிங்கள அரசின் வரலாற்றிலே தமிழ் மக்களின் தலையீடுகள் ஏற்பட்ட போதுதான் தமிழ் மக்கள் பற்றிய குறிப்புகள் இவற்றில் உள. இத்தகைய குறிப்புகள் தமிழ் மக்களின் வரலாறு பற்றி அறியப்போதிய சான்றாதாரங்களாக அமையவில்லை.

தமிழ் நூல்களாகிய கைலாய மாலை, வையாபாடல் , யாழ்ப்பாண வைபவ மாலை ஆகியன நல்லூர் அரசின் எழுச்சிக்காலத்தில் எழுதப்பட்ட போதிலும் நல்லூர் அரசு பற்றிய விரிவான சான்றுகள் இவற்றிலும் இல்லை. அதுமட்டுமன்றி இவ்வரசிற்கு முன்னர் உள்ள காலப்பகுதி பற்றி அங்குமிங்குமாக தொடர்ச்சியற்ற முறையில் தான் குறிப்புகள் சில உள.

தொல்லியற் சான்றுகளை நோக்கும் போது சிங்களஅரசுகள் நிலைத்திருந்த பகுதிகளோடு ஒப்பிடுகையில் வடபகுதி பெரும்பாலும் தொல்லியலாளர்களின் கவனத்தினை ஈர்க்காத பகுதியாகவே விளங்கியுள்ளது.

இந்நிலையில் ஈழத்து வரலாற்றினை எழுதியோர் பாளி நூல்களை மூலாதாரமாகக்கொண்டு எழுதியதாலேயே தமிழ் மக்கள் இன்று செறிந்து வாழும் பிரதேசங்களில் அவர்களின் வரலாற்றுக்குரிய பங்கினை அளிப்பதற்கு பதிலாக சிங்கள தலைநகர்களுக்கே முக்கியத்துவம் கொடுத்தனர். தமிழ் மக்களின் பிராந்தியங்களுக்குரிய இடத்தினை அவை நல்கவில்லை. இருந்தும் தமிழ் மக்களின் பங்களிப்பு பற்றியும் வடபகுதி ஈழத்து வரலாற்றில் பெற்றிருந்த முக்கியத்துவம் பற்றியும் இந்த நூற்றாண்டின் இருபதுகளில் சேர் போல் பீரிஸ் கந்தரோடையில் மேற்கொண்ட மேலாய்வுகளும் இதனைத் தொடர்ந்து இராசநாயக முதலியார், சுவாமி ஞானப்பிரகாசர் போன்றோர் இப்பகுதி வரலாறு பற்றி எழுதிய நூல்களும் ஆய்வுக்கட்டுரைகளும் வெளிவந்திருந்தும் கூட ஈழத்து வரலாற்றிலே தமிழ் மக்களின் பங்களிப்பையும் குறிப்பாக வடபகுதிக்குரிய இடத்தினையும் சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் அங்கீகரிக்கவில்லை.

## இவ்வார விழிப்பில்...

- சுனாமிப் புனரமைப்பு ஓர் மீளாய்வு
- கிழக்கில் சுனாமிப்பாதிப்புற்றோரும் தொழில் பிரச்சினையும்
- தென்னிலங்கையில் சுனாமி அபிவிருத்தி ஒரு பார்வை
- வடக்கில் யுத்த பீதியுடன் சுனாமிப்பாதிப்புற்றோர்.
- கிழக்கு கரையின் அழைப்பு

## சமாதான நிகழ்வு

தேசிய சமாதானப்பேரவையின் ஆதரவில் தெற்கிலிருந்து சுமார் 60பேர் கொண்ட ஊடகவியலாளர் குழுவொன்று இம்மாத ஆரம்பத்தில் திருகோணமலயின் பல பகுதிகளுக்கும் சென்று நிலமைகளை பார்வையிட்டது. திருகோணமலை நகரம், கிண்ணியா, ஆலங்கேணி போன்ற பகுதிகளில் போரினாலும் சுனாமியினாலும் பாதிக்கப்பட்ட மக்களையும் இவர்கள் சந்தித்து கலந்துரையாடினர்.



விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் இரவு **7.30**மணிக்கும், TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு **7.25** மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

# தமிழரின் தாயகம் -தன்னாட்சி அதிகாரம்-சுயநிர்ணயம் என்பவற்றை சிங்களவர் ஏற்றுக்கொள்ள வேண்டும்

## -சிங்கள அரசியல் ஆய்வாளர் சனிரால் லக்திலக

(கொழும்பு)

தமிழர் தாயகக் கோட்பாடு மற்றும் விடுதலைப்புலிகளின் தன்னாட்சி அதிகாரசபை, சுயநிர்ணயஉரிமை ஆகியவற்றை சிங்களவர் ஏறகவேண்டும் என்று சிங்கள இனத்தைச் சேர்ந்த சட்டத்தரணியும் அரசியல் ஆய்வாளருமான சனிரால் லக்திலக வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்விற்கு கூட்டாட்சி முறையே சிறந்தது என பது தொடர்பாக கருத்தரங்கு அநுராதபுரம் சாரானந்த பிரிவேனாதில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் சட்டத்தரணியும் அரசியல் ஆய்வாளருமான சனிரால் லக்திலக பேசுகையில்,

தமிழர் தாயகம் ஏற்றுக்கொள்ளப்பட வேணடிய அம்சம். தனிநாடு கோரிய விடுதலைப் புலிகள் ஐக்கிய இலங்கைக்குள தீர்வு காண முன்வந்துள்ளபோது கோரும் பெயராலேயே நிர்வாகப் பிரதேசம் வழங்கப்படவேண்டும்.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஏறறுக்கொள்வதென்பது சிங்களவர்களுக்கு கசப்பான விடயமாக இருப்பது கவலைக்குரியது எனறார். பேராதனைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஜயந்த செனவிரத்ன அங்கு உரையாற்றுகையில்,

சிங்கள மககள் வாக்களித்தமையால் மட்டும் மஹிந்த ராஜபக்ஷ வெற்றிபெறவில்லை. இலட்சக்கணக்கான தமிழர்கள் வாக்களிக்காமையினாலேயே அவர் வெற்றிபெற்றார். அவர் எனது சிறந்த நண்பர். நேரடியாகவே இதை நான் அவரிடம தெரிவித்தேன.

ஏகாதிபத்தியவாதிகளின் ஆட்சி முறையினாலேயே இனப்பிரச்சினை ஏற்பட்டது. தங்கள் நலனுக்காக இலங்கையரை அவர்கள் இரையாக்கியுள்ளனர். அனைவரையும் வீழ்த்தி தங்கள் ஆதிக்கத்திற்குள் இருந்தவர்களை ஆங்கிலேயர் ஓரினத்தவராக்க முயன்றனர்.

இது ஒரு மிலேச்சத்தனமாக செயல். இதனால் பல இனக்குழுக்கள் முகவரி இல்லாமல் போயின. பல இனங்கள் வாழும் நாட்டில் ஒரு இனம் உருவாகமுடியாது. சுதந்திரத்தின் பின்னர் எமது தலைவர்கள் இலங்கையரை ஓரினத்தவராக்கவே கருதி அரசியல் யாப்பை உருவாக்கினர். இது மிக மோசமான செயல். இந்தயா சுதந்திரம் பெற்ற பின்னர் தலைவர்கள் இராஜதந்திரிகளாகத் திகழ்ந்தனர். இலங்கையில் இன்றும் பேராசைபிடித்த அரசியல் தலைவர்களே உள்ளனர் என்றார்.

சடடத்தரணி ஜயலத் பண்டார அங்கு பேசுகையில,

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் இனப் பிரசசினைக்கு தீர்வுகாண எதையோ கூறி மக்களை ஏமாற்றியவர்கள் இன்று வேறு எதையோ கூறி வருகின்றனர். இப்படிப் பட்ட அசியல்வாதிகளால் நாட்டில் பிரச்சினைகள் அதிகரித்த வண்ணமே உள்ளன என்றார்.

கூட்டாட்சி முறைத்தீர்வு தொடர்பாக கருத்துத் தெரிவிக்க இக்கருத்தரங்கில் அனைத்துக்கட்சியினருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகள் மட்டுமே இதில் கலந்துகெண்டிருந்தனர்.

ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி சார்பாக, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி. ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்கவில்லை. (ற)

## சிலாபத்தில் புத்த பிக்குவின் சடலம் மீட்பு

புத்தளம் சிலாபம் பகுதியிலுள்ள குளம் ஒன்றிலிருந்து புத்த பிக்கு ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட புத்த பிக்கு அண்மையிலுள்ள விகாரையொன்றில் வசித்தவர் என்று புத்தளம் பொலிஸ் அதிகாரி ரொசான் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பிரதேச வாசிகள் வழங்கிய தகவலுக்கு ஏற்ப சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மரண விசாரணை நேற்று நடைபெற்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை சிலாபம் பொலிஸார் மேற்கொண்டனர். (ற)

## முல்லைத்தீவில் நினைவாலயமாக தேவாலயம்

(முல்லைததீவு)

முல்லைததீவு புனித இராயப்பு தேவாலயம் இனிவரும் காலத்தில் வழிபாட்டுக்கு பயன்படுத்தப்படமாட்டாது என தேவாலாய வணபிதா ஜேம்ஸ் பததிநாதன் அடிகளார் அறிவித்துள்ளார்.

இதற்குப் பதிலாக அது நினைவாலயமாகப் போற்றப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த வருடம் டிசம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப் பேரலையின் காரணமாக இந்த ஆலயம் முற்றாகச சேதமடைந்தது. இந்நிலையில் ஆழிப் பேரலையினால் முல்லைத்தீவில் பலியான சுமார் 3500பேரின் நினைவாக அவர்களின் பெயர்கள் இந்த தேவாலயத்தின் தூண்களில் பொறிக்கப்பட்டு எதிர்வரும் 26ஆம் திகதி முதல் இந்த ஆலயம் நினைவாலயமாக போற்றப்படவுள்ளது. (ற)

## விசேட பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்திக்காக தெல்லிப்பளை பிரதேச செயலகத்தால் நாளை காலை 10.30மணிக்கு தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் கூட்டுப் பிராாத்தனை வழிபாடும், தொடர்ந்து 11.00 மணக்கு விசேட பூஜை வழிபாடும் நிகழ்ததப்படவுள்ளன.

இவ்விசேட் நிகழ்வுகளில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த சகல மக்களையும் கலந்து பிரார்த்தனையில் ஈடுப்டுமாறு வலி.வடக்கு உதவிப் பிரதேச செயலாளர் சு.முரளிதரன் கேட்டுள்ளார். (ற)

## கண்ணிவெடி மீட்பு

(திருநெல்வேலி)

புத்தூர் மற்றும் மீசாலைப் பகுதியில் நேற்று முன்தினம் காலை 5.00 மணிக்கு இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையொன்றினை மேற்கொண்டனர்.

இதனபோது வெடிக்காத நிலையில் கணணிவெடி ஒன்று மீட்கப்பட்டதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (ற-43)

# யாழ்.குடாநாட்டு நிலைமைகள் குறித்து க.கா.குழு மௌனம் சாதிப்பது ஏன்?

## -கஜேந்திரன் எம்.பி.

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு தர்சினி பாலியல் படுகொலை, யாழ்ப்பாண இராணுவ வன்முறைகள் தொடர்பாக இலங்கை போர்நிறுத்த கண்காணிபபுக்குழு மௌனம் சாதிப்பது ஏன்? என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் கஜேந்திரன் எம்.பி. மேலும் கருத்து வெளியிடுகையில்,

யாழ.பல்கலைக்கழக மாணவர்களின் ஊர்வலத்தை இராணுவம் தடுத்தது-துப்பாக்கியால் சுட்டு பல்கலைக்கழகத் துணைவேந்தர் மோகனதாசைஸூம் மற்றும பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்க்ள், ஊடகவியலாளர்கள் ஆகியோரையும் காயப்படுத்திய சம்புவங்கள் பற்றி கண்காணிப்புக்குழு மௌனமாக இருக்கின்றது.

இராணுவம் துப்பாக்கியால் சுட்டு பெரும் வன்முறையை அங்கு ஏற்படுத்தியபோது கண்காணிப்புக்குழு அந்த இடத்திற்கு வரவில்லை.

புங்குடுதீவில் இளையதம்பி தர்சினி என்ற 20வயது பெண் பாலியல் வ்ல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டதை கண்டித்தவர்களாக அந்தப் பெண்ணின் மரணச் சடங்கில் கலந்துகொள்ளச் சென்ற மக்களை இராணுவம் தடுத்து துபபாக்கியால சுட்டும் தடியடிப்பிரயோகமும் செய்தது. இதனால் அங்கு பெரும் களே



பரம் ஏற்பட்டபோதும் கண்காணிப்புக் குழு அந்தச் சம்பவம் தொடர்பாக எந்த அறிக்கையையும் வெளியிடவில்லை.

இந்நிலைமைகளினால் கண்காணிப்புக்குழு இராணுவ மற்றும் அரசாங்கத்தின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து செயற்படுகின்றதோ என நாங்கள் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

இராணுவத தளபதி சரத் பொன்சேகா 1996ஆம் ஆண்டு யாழ். மாவட்டத் தளபதியாக இருந்த காலப்பகுதியில் 600க்கும் அதிகமான இளைஞர், யுவதிகளை அவரது தலைமையின் கீழ இருந்த படையினர் கைது செய்து கொலைசெய்து செம்மணியில் புதைததனர்.

அது தொடர்பான வழக்கு உயர்நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. அபபடியான ஒரு தளபதி தான் இன்று இராணுவத் தளபதியாக பதவியேற்றுள்ளார் என்றார். (ற)

# வவு.இல் மாணவர் ஒன்றியக் காரியாலயம் படையினர், பொலிஸாரால் சோதனை

## 4 மாணவர் கைது

(வவுனியா)

வவுனியா குருமன்காட்டுப் பகுதியில் அமைந்துள்ள அனைத்து பல்கலைக்கழகங்களின் மாணவர் ஒன்றிய காரியாலயத்தில் படையினர், பொலிஸார் இணைந்து சோதனை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். பொலிஸாருக்கும் படையினருக்கும் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே இத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சோதனையின் போது காரியாலயத்திலிருந்து புலிகளின் சுவரொட்டிகள், பாசாலை உடைகள், சிவபபு மஞ்சள் கொடிகள், பிரபாகரனின் புகைப்படங்கள் என்பன பொலிஸினால் எடுத்துச்செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, சோதனையின்போது மாணவர்களையும் படையினர் கைது செய்து வவுனயா பொலிஸாரிடம் ஒப்படைததனர். மாணவர்களின் கைது தொடர்பாக மாணவர் ஒன்றியம் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடுசெய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-8)





அண்மையில் சமுர்த்தி அதிகாரசபையின் கிராம அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் புங்குடுதீவு வட-கிழக்கு ஜே/22, ஜே/23 கிராமசேவையாளர் பிரிவுகளில் சமுர்த்தி செயலணியால் அமைக்கப்பட்ட தொட்டிகளை வேலணைப்பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ப.லோகநாதன் வைபவரீதியாகத் திறந்துவைத்து மக்களுக்கு குடிநீர் வழங்குவதையும் அருகில் வேலணை பரதேச சமுர்த்தித்தலைமை முகாமையாளர் கே.கருணாநிதி கிராம சேவையாளர் கு.சந்திரா, சமுர்த்தி உத்தியோகத்தர் க.அஜந்தன் உட்பட மக்கள் நிற்பதையும் புங்குடுதீவு சமுர்த்த' முகாமையாளர் சு.சசிகலா கருத்துரை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் புங்குடுதீவுச் செய்தியாளர்)

# வலம்புரியின் நத்தார் சிறப்பு ம

## வந்தனன் இயேசு பாலன்



பெத்லகேம் நகரந் தன்னில்
பெருமழை பொழியும் மாதம்
சத்தியம் காக்க வல்ல
சரித்திரம் தோன்றிற் றம்மா!

மற்றவர் பாவந் தன்னை
மனநிறை வுடனே யேற்று
கொற்றமே யளிக்க வாழ்வில்
கொழுமதி தோன்றிற் றம்மா!



வையமே இருளில் மூழ்க
வனப்புறு மரிய அன்னை
தையலாள் வயிற்றில் நின்று
தருமமே தோன்றிற் றம்மா!

ஆநிரை விழித்துக் கொள்ள
ஆய்ச்சியர் வழுத்தித் துள்ள
வானவர் வாழ்த்துப் பாட
வந்தனன் இயேசு பாலன்!

கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்.

## யேசு பொழிந்த தெள்ளமுது

மேதினிக்கு யேசு நாதர் எதற்கடி தோழி – முன்பு
வெம்மை கொள் மக்களைச் செம்மை புரிந்திடத் தோழா
வல்லவர் யேசு வகுத்தது தான் என்ன தோழி – புவி
'மக்கள் எல்லாம் சமம்' என்று முழங்கினர் தோழா
தூண்டும் அருள யேசு சொல்லிய தென்னடி தோழி – அவர்
'சோதரர் யாவரும்' என்று முழங்கினார் தோழா
கோல நல் யேசு குறித்தது தானென்ன தோழி – ஆகா
கோயி லென்றால் அன்பு தோய் மனம் என்றனர் தோழா
ஆண்மை கொள் யேசு புவிக்குப் புரிந்ததென் தோழி – அவர்
அன்பெனும் நன்முர செங்கும் முழங்கினார் தோழா – அந்த
ஆண்டவன் தொண்டர்கள் ஆகிடத் தக்கவர் யாவர் – எனில்
'அன்னியர்', 'தான்' என்ற பேதமில்லாதவர் தோழா

பாவேந்தர் பாரதிதாசன்.

## மரியாள் மகவினைப் பாடுங்கடி!



பாடுங்கடி பாட்டுப் பாடுங்கடி – பாலன்
பான்மை பளிச்சிடப் பாடுங்கடி!
கூடுங்கடி ஒன்றாய் கூடுங்கடி – (இயேசு
கூற்று குவிந்திடக் கூடுங்கடி!

பெத்லேம் பெருநகர் நோக்குங்கடி – அங்கு
பெரியமந்தை தினம் பாருங்கடி!
புத்தி தெளிந்திடப் பாடுங்கடி – தேவன்
புதுமை பர்ந்திடப் பாடுங்கடி!

மரியாள் மகவினைப் பாடுங்கடி – அவன்
மாண்பு மலர்ந்திடப் பாடுங்கடி!
விரிந்து உலகுஉ யர்ந்திடவே – என்றும்
விளித்து அவனருள் பாடுங்கடி!

சுண்டிக்குழியூர் த.விதுரன்.

## அனுதினம் துதிப்போம்!

மாதமும் மார்கழித் திங்களாய் மலர்ந்தது
மக்களின் மனங்களில் மகிழ்வுமோ பிறந்தது
பாதகம் ஒழிந்திட பாலகன் கிறீஸ்து
பாரினில் வந்துமே வைக்கோலில் பிறந்தார்
வேதனை சூழ்ந்துமே போதனை பொழிந்தவர்
வேதமும் நிலைத்திட புதுமைகள் புரிந்தார்
ஈதலும் இரக்கமும் கொண்ட அவ் இறை மகன்
அருள்தனை வேண்டியே அனுதினம் துதிப்போம்.


அல்வையூர்
கே.ஆர்.திருந்துவராஜா.

## பாலன் பிறந்தனன்

மார்கழித் திங்கள் பனிக்குளிர்காலம்
பெத்லேம் நகர் மக்கள் உவகையுற்றிட
விண்ணிலிருந்து தாரகைகள் ஒளிக்கீற்றுக்கள் வீசிட
தேவதூதன் வருவான் என நம்பிநிற்க வந்தே
தொழுவத்தில் பிறந்தனன் பாலன் யேசு
மாந்தர் அனைவரும் மகிழ்வுடன் இன்று
பாரினில் அவன்புகழ் பாடித் துதித்து
நத்தார் தினத்தினைக் களிப்புடன் கொண்டாடுவோம்.

இ.வி.இரத்தினம், யாழ்ப்பாணம்.

## நீதியுடன் கூடிய நிரந்தர சமாதானம் மலர வேண்டும்



2005ஆம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழா வாழ்த்துக்களையும் ஆசிரையும் முதலில் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இவ்வாண்டு கிறிஸ்மஸ் விழா கடந்த வருடம் மார்கழி மாதம் 26ஆம் திகதி ஆண்டவர் இயேசுவின் பிறப்பு விழாவின் பின்னர் நகழ்ந்த சுனாமிப் பேரலை அனர்த்தத்தையும் அதன் கோர விளைவுகளையும் எம் எல்லோர் மனதுகளிலும் மீண்டும் ஒரு தடவை சோகமாக அசைபோடுவது தவிர்க்கப் பட முடியாதது.

போரின் கொடூர அனுபவங்களிலும் அதன் தாக்கங்களிலும் இருந்து மெதுவாக விடுபட்ட வேளை யாழ். மறை மாவட்டத்தின் குறிப்பாக கரையோரப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் இப் பேரலை அனர்த்தத்தால் துன்பத்தையும் வேதனையையும் அனுபவித்து உயிர்களை இழந்து உடமைகளைப் பறிகொடுத்து தாங்கமுடியாத சோகத்திற்கு உள்ளாக கப்பட்டார்கள். உறுதிசெய்யப்பட்ட நிவாரணப் பணிகள் அரசியல் காரணங்களாலும் இனவாதப் போக்குகளாலும் பாதிக்கப்பட்டவர்களிற்கு வழங்கப்படாமல் போனாலும் நாம் இந்தப் பணியை மத வேறுபாடின்றி சிறப்பான முறையில் ஆற்றியிருக்கிறோம் என்பதில் மனத் திருப்தி அடைகிறோம். இப் பணியை ஆற்ற உதவிய நல்லெண்ணம் கொண்டவர்களிற்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறோம்.

ஜோவான் நற்செய்தியில் லாசருடைய இறப்பு நிகழ்வில் மாத்தாளுக்கும் இயேசுவுக்கும் நடந்த அந்த உரையாடலின் பின்னர் லாசர் புதைக்கப்பட்டிருந்த குகையின் முன்னால் இயேசு சொன்ன வார்த்தைகள் எமக்கு நம்பிக்கை தரும் வார்த்தைகளாக இருக்க வேண்டும். அவர் 'நீ நம்பினால் கடவுளின் மாட்சியைக் காண்பாய் என நான் உன்னிடம் கூறவில்லையா?' (ஜோவான் 11:40) என்று கூறினார். இழப்பையும் இறப்பையும் அனுபவித்து வேதனையில் ஆழ்ந்திருப்பவர்கள் மத்தியில் நாம் ஆற்றுகின்ற நிவாரணப் பணிகளும் அன்புப் பணிகளும் தான் அவர்களின் வேதனையை ஆற்றி இறைவனின் அருட் கொடையை உணர வழிவகுக்கும்.

உன்னதத்தில் கடவுளிற்கு மாட்சி உரித்தாகுக. உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக (லூக் 2:14) என்ற வான தூதரின் வாழ்த்து இயேசுவின் பிறப்பு வாழ்த்து. இவர்களிற்கும் எல்லோருக்கும் மகிழ்ச்சியின் வாழ்த்தாகவும் அருளின் வாழ்த்தாகவும் இருக்க வேண்டுகிறோம்.

இவ்வாண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலும் அதன் முடிவுகளும் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான நன்மைகளைக் கொண்டு வரப்போகிறது என்பதை எதிர்நோக்கியவர்களாக தமிழ் மக்கள் அனைவரும் இருக்கிறார்கள். கடும் போக்கையும் இனவாதத்தையும் கடைபபிடிப்பவரான ஜனாதிபதி தமது கூட்டுக் கட்சிகளுடன் இணைந்து தமிழ் மக்களுக்கு அமைதியும் பாதுகாப்பும் கிடைக்கத்தக்க விதமாக நீதியோடு செயற்படுவாரா அல்லது தமிழ் மக்கள் திரும்பவும் போரையும், வன்முறையையும், அழிவையும், இறப்புக்களையும் அனுபவிக்கினற விதமான ஒரு வாழ்வை அமைத்துத் தரப்போகிறாரா என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

விடுதலைப்புலிகளின் தலைவர் 2005ஆம் ஆண்டு மாவீரர் தின உரையில் தெரிவித்த முக்கியமான விடயம், இலங்கை அரசை தீவிரமாகச சிந்திக்கவும் வேகமாகச் செயற்படவும் அழைப்பு விடுத்திருக்கிறது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இது சிந்திக்க வேண்டிய அறிவிபபாகும். இவ் வேண்டுகோள் நிராகரிக்கப்படுமேயானால் மீண்டும் போர் மூழும் சூழல் உருவாவது தவிர்க்கப்பட முடியாதது. சர்வதேச உலகும் ஊடகங்களும் இலங்கையின் இன்றைய நிலையை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு இருக்கின்ற வேளையில் தமக்கு என்ன விளைவுகள் ஏற்படுமோ என்ற ஏக்க உணர்விலே தமிழ் மக்கள் இருக்கிறார்கள்.

போரையும் அதன் கொடூர அனுபவங்களையும் தமிழ் மக்கள் மீண்டும் ஒரு தடவை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.

புதிய ஜனாதிபதிக்கும், இலங்கை அரசிற்கும், எதிர்கட்சிகளிற்கும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் கட்சி இலாபங்களையும் சுய நலன்களையும் விடுத்து இவ் அவசர அழைப்பை ஏற்று இலங்கை மண்ணில் நீதியோடு கூடிய ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படச் செயற்படும்படி தமிழ் மக்கள் பெயரால் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறோம்.

உலகின் ஒளியாகப் பிறந்த பாலக இயேசு இலங்கை மண்ணில் நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வு ஏற்பட அருள் பாலிக்கும்படி வேண்டி அனைவருக்கும் நத்தார் புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

யாழ்.ஆயர்
மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை



## கிறிஸ்மஸ் காலத்தில் சர்வதே
## சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க



2005ஆம் ஆண்டு நத்
வாசக அன்பர்கள் அ
விரும்புகிறோம்.
'உன்னதங்களி
குக. பூவுலகில் நல் ம
குக' என்ற வானவரி
வின் பிறப்பு இன்று எம
யும் சமாதானத்தையு
இவ்வாண்டு கிறி
டப்படுகின்ற வேளையி
களை பெரிதும் நெ
முதலாவது சுனாமி இயற்கை அன[illegible]இரண்டா
கம். கடந்த ஆண்டு கிறிஸ்மஸ் தின[illegible]திற்[illegible] அடுத்த
றகை அனர்த்தப் பேரலையும், அதன் அழிவும், தாக்க
அதன் வேதனையும் இன்னும் மறக்கப்பட முடியாத
அந்த நிகழ்வின் ஓராண்டு வருகின்ற வேளையி
தாலும் உயிர் இழப்புக்களை மறக்கவே முடியாது.
பழகி அன்பாக உறவாடி இருந்தவர்கள் திடீரென ஒ
விதமாக எம்மைவிட்டுப் பிரிந்து சென்ற இழப்பு தாங்க
இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இ
டிக்கொள்ளுவது எமது முதற் கடமையாகும். பொ
சிறிய பகுதியை நிவாரண உதவிகள் மூலம் பெற்றுக்
பழைய நிலையை ஈடுசெய்யவோ நிவர்த்தி செய்யவே
எமது சீவியகால சொத்துக்களையும் சிறுகச் சிறுக
வகையிலும் ஈடுசெய்யப்போவதில்லை.
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் த
வியன்னி பெர்ணான்டோ ஆண்டகை கையொப்பம் இ
பகிர்தலின் காலம்' என்ற தலைப்பில் வழங்கப்பட்டு
தானம் வேகமாக எம்மைவிட்டு விலகிக்கொண்டு இ
ஒப்பந்தம் இக்கட்டுக்குள்ளான நிலையில் இவ்வாண்
கொண்டாடுகின்றோம். நாம் யுத்த[illegible]க்கும் ச[illegible]ானத்
நிலையில் இருப்பது போல தெ[illegible]றது. இருப்பினு
முடியாது. கடவுள் தமது வாழ்வை முழுமையாக
துள்ளார். அந்த வாழ்வு நீதி, அன்பு, சாமாதானம் என்ப
ான் வார்த்தையில் நம்பிக்கை வைத்து நம்பிக்கையு
தெரிவிக்கப்பட்டுள்ளது.
நாம் அரசையும் விடுதலைப் புலிகளையும் யு
முழுமையாகப் பின்பற்றும் படி வேண்டுகின்றோம்.
சர்வதேச சமூகத்தினரை மேற்படி இரு தரப்பின
மற்ற குழுக்களையும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்
முழுமுனைப்பாக ஈடுபடும்படி வேண்டுகோள் விடு
தரப்பினரையும் ஓர் அரசியல் தீர்வை அடைவதற்கான
அழுத்தம் கொடுக்க வேண்டுமென சர்வதேச ச

# நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார், புதுவருட நல்வாழ்த்துக்கள்!

## ரிச் கேக் / RICH CAKE

### 175 ரிச்கேக் தயாரிக்க தேவையான மூலப்பொருட்கள்

| | |
|---|---|
| 500 கிராம் ரவை | 1 போ.கோல்டன் சிரப் |
| 500 கிராம் பட்டர் | 200 கிராம் கென்டீட் பீல் |
| 500 கிராம் பிளம்ஸ் | 1 வெனிலா எசன்ஸ் |
| 500 கிராம் ரெய்சின்ஸ் | 1 ஆமன்ட் எசன்ஸ் |
| 500 கிராம் செரீஸ் | 1/2 றோஸ் எசன்ஸ் |
| 500 கிராம் பம்கின் பிரசர்வ் | 1 வைன் கிளாஸ் தேன் |
| 600 கிராம் கஜு | 2 வைன் கிளாஸ் பிரண்டி |
| 200 கிராம் கறன்ஸ் | 1/4 தேக்கரண்டி உப்பு |
| 500 கிராம் சவ் சவ் | 27 முட்டை |
| 500 கிராம் ஜின்ஜர் பிரசர்வ் | (27 மஞ்சள் கரு |
| 1 போ.ஸ்ரோபரி ஜேம். | 14 வெள்ளை கரு) |
| 600 கிராம் சொவ்ட் சுகர் | 1/4 தேக்கரண்டி சாதிக்காய் |

செய்முறை:

முட்டை, சீனி, வறுத்த ரவை, பட்டர் முதலியவற்றை தவிர மற்ற பொருட்களை சிறுதுண்டுகளாக வெட்டி 5 நாட்களுக்கு வைக்கவும்.

வெள்ளைக்கருவை சீனியில் சேர்த்து நன்றாக அடித்து வறுத்து ரவையைசேர்க்கவும். அத்துடன் மஞ்சள் கரு,பட்டர், வெட்டிய பொருட்களுடன் சிறிதளவு பேக்கிங்பவுடரையும் சேர்க்கவும். பிறகு கேக் டிரேயில் போட்டு பேக் செய்யவும்.

### RECIPE FOR RICH CAKE

RECENT ARRIVAL OF QUALITY FRESH CAKE INGREDIENTS ALL AT VERY COMPETITIVE PRICE

**INGREDIENTS FOR 175 PIECES RICH CAKE**

| | |
|---|---|
| 500 grms Semolina | 200 grms Candid Peel |
| 500 grms Butter | 1 OZ.Vanilla Essence |
| 500 grms Sultanas | 1 OZ.Almond Essence |
| 500 grms Raisins | 1/2 OZ.Rose Essence |
| 500 grms Cherries | 1 Wine Glass Bees Hony |
| 500 grms Pumpkin Preserve | 2 Wine Glass Brandy |
| 600 grms Cadju Nuts | Rind from a Lime |
| 200 grms Currants | 1/4 Tea Spoon Salt |
| 500 grms Chow Chow | 1 Tab Spoon Spices |
| 500 grms Ginger Preserve | 27 Eggs |
| 1 Bottle Strawbery Jam | (27 Yolks - 14 white) |
| 600 grms So ft Sugar | 1/4 Tea Spoon net meg |
| 1 Bottle Golden Syrup | |

METHOD

Chop all the ingredients and mix all the fruits together with the Spices, Golden Syrup,Brandy and Essences and set aside for 5 days.

Beat the White Yolk With Sugar add Roasted Semolina With Butter. Then mix Yellow Yolk and the Chopped Fruits (Add little baking powder) pour the mixture on a cake tray and bake.

பெட்டா எசன்ஸ் சப்பிளையர்ஸ்
104(298), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பேசி/பெக்ஸ்:021 222 2386

PETTAH ESSENCE SUPPLIERS
104 (298) Hospital Road,Jaffna
Tel/Fax :021 222 2386
(C 075)

நத்தார், புதுவருட நல்வாழ்த்துக்கள்!

31-12-2005 வரை புதுவருட மலிவு விற்பனை
நீங்கள் வாங்கும் சகல பொருட்களுக்கும்
விசேட கழிவு



உடன் விரையுங்கள் இறுதிச் சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
லைடன் புடைவை நிலையம்
இல: 410, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம். T.P: 222 2381

நத்தார், புதுவருட நல்வாழ்த்துக்கள்!



RENNY
DENTAL & OPTICAL SERVICE



*கணனி மூலம் கண் பரிசோதித்து கண்ணாடி வழங்கப்படும்
*பல் கட்டிக் கொடுக்கப்படும்
*மிதப்புப் பற்களுக்கு கிளிப் செய்து கொடுக்கப்படும்

பிரதான வீதி, பருத்தித்துறை.
[வேலாயுதம் பாடசாலைக்கு அருகில்]


இல: 540, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P: 222 3703

## மழலை யேசுவே மனமுருக வேண்டுகிறோம்!

காலங்கள் யாவும் கண்துஞ்சாமற் காத்து இரட்சிக்கும்
ஆருயிர்த் தேவன்
அமல ஏதிலியாய் இந்த மேதினியை நாடிய ஆதி முதல்வன்
பாலமென இறைவன் மனிதன் உறவை இணைக்கும்
காலை இளம் கதிர்; பச்சிளம் பரம சஞ்சீவி
சீலமும் ஞானமும் தெய்வ சிந்தையும் குன்றி
வேதனை, சோதனை, சோகங்கள் கீதம் பாடும்வேளை
அஞ்சேல் என அபய மளிக்க அவதரித்தவன்
கலக்கும் சூறாவளி, சுனாமி, மழை, வெள்ளம்
மண்பனிமழை, காட்டுத்தீ, இடி, மின்னல்
இயற்கை, செயற்கை அபாய அனர்த்தக்
கோலங்கள் கௌவி அழிவை அண்மிக்கும்
ஞாலம் தனில் எமை ரட்சிக்க வந்த நாயகன்
ஆலைவாய்க் கரும்பாய் அரவின் வாய்த் தேரையாய்
ஓலமிட்டலறும் பாருலக மக்களைப் பாதுகாக்க வந்த
பரிவுசால் 'மெசியா' பாலகன் யேசுவே
மார்கழியின் குளிரில் மாடுறையும் குடிலைத் தேடிய
பேர் மேவுஞ்சுதனே
போர் முகில் கலைந்து இறையருள் மலர்ந்து
பிருதுவி உயிர்கள் உவப்பாய் உய்ய
கார்குழல் மரியாள் தார்மீகச் சூசையின்
தவத்திருவுருவே
இருதிரு நின் சுடர்மணிக்கரங்கள் தூக்கி
பெருகிடும்நல் வரமழை பொழிவாய்
திவ்விய பாலனே யேசு ராஜனே!

தே.ச.வில்சன், யாழ்.

# கண்புரை குடும்பத்தையே பாதிக்கும்...!



சகோதரி அல்லது சகோதரனுக்கு கிளாக் கோமா எனப்படும் கண்புரை நோய் இருந்தால், அந்தக் குடும்பத்தில் உள்ளமற்றவர்களுக்கும் கண்புரை வர 4 மடங்கு வாய்ப்பு இருப்பதாக பிரிட்டிஷ் ஜர்னல் ஆஃப் ஆப்தல்மாலாஜி என்ற மருத்துவ இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

தாய் - தந்தைக்கு கண்புரை நோய் இருந்தால் அந்தக் குடும்பத்தில் உள்ள மற்றவர்கள் உடனடியாகக் கண் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். எனினும் ஆரம்பத்தில் நோர்மல் போல இருக்கலாம். அதற்காக அப்படியே விட்டுவிடக் கூடாது.

2 வருடத்துக்கு ஒருமுறை அவசியம் கண்பரிசோதனை செய்யவேண்டும். இதன்மூலம் கண்புரை ஏற்படுவதை முன் கூட்டியே தடுக்கலாம்.


கண்புரை என்பது கண் பார்வை நரம்புகளைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பாதித்து, நாளாவட்டத்தில் கண் பார்வையைப் பறித்துவிடும்.

# அடிக்கடி மூச்சு விட்டால் ஆபத்து!

ஆழ்ந்து மூச்சு விடுவதுதான் சிறந்த சுவாசம். இதில் தடை உண்டாகி, அடிக்கொரு தடவை அதாவது மிகக் குறுகியநேர இடைவெளியில் மூச்சு விட்டுக் கொண்டிருந்தால் அது இருதய நோயின் அறிகுறி என்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள்.

இருதய நோய்களுக்கான எந்த அறிகுறியும் தென்படாமல், மேற்படி சுவாசக் கோளாறு மட்டும் இருந்தால் குறிப்பிட்ட அந்த நபர் இருதய நோய்களால் உயிரிழக்க 4 மடங்கு வாய்ப்புள்ளதாக கூறியுள்ளனர்.

பொதுவாக சுவாசக் கோளாறுகளை நோயாளிகள் பொருட்டாக மதிப்பதில்லை. ஆனால் நுரையீரல் சம்பந்தமான நோய்கள் இல்லாமல், இருதய நோய்க்கான ஆபத்தான காரணிகள் இருந்தால் இருதய இரத்த நாளங்கள் பாதிக்கப்படும் வாய்ப்பு அதிகம். மூச்சு விடுவதில் சிரமம் இருக்குமானால், உடனடியாக உஷாராகி இருதய பரிசோதனைகள் செய்து கொண்டால், ஆபத்து வருவதற்கு முன்பே தப்பிக்கலாம்.



குறிப்பாக, இயல்பாக மூச்சு விடுவதில் சிரமம் உள்ள பெண்கள் கண்டிப்பாக இருதய பரிசோதனைகள் செய்ய வேண்டும். உடல் பருமனுக்கும், சுவாசம் தடைப்படுவதற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஆண்களுடன் ஒப்பிடும் போது பெரும்பாலும் பெண்கள் குண்டாக இருக்கிறார்கள். இருதயத்துக்கு உண்டாகும் ஆபத்தை ஆரம்பதிலேயே கண்டு பிடித்து சிகிச்சை அளித்தால் விரைவில் பூரண குணம் அடைய முடியும்.

# நினைவாற்றல் அதிகரிக்க...

மூளைக்கும், உடம்புக்கும் பயிற்சி கொடுப்பதன் மூலம் நினைவாற்றலை அதிகரிக்க முடியும்.

நினைவாற்றல் பயிற்சிகள், மன அழுத்தத்தைக் குறைப்பது, ஆரோக்கியமான உணவு, முறையான உடற்பயிற்சி... இந்த நான்குமே ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவை.

வாழ்க்கை முறையோடு பின்னிக் கிடக்கும்; இந்த நான்கையும் வெறும் 2 வாரம் சரிவர கடைப்பிடித்து வந்தால், நினைவாற்றல் அதிகரிப்பதோடு நின்றுவிடாமல் மூளையின் ஒட்டுமொத்த திறமையும் அதிகரிக்கும்.



ஒரு நாளைக்கு மூன்று வேளை சாப்பிடுகிறோம். இதேயளவு உணவை 5 வேளையாகப் பிரித்துச் சாப்பிட்டால், இரத்தத்தில் சர்க்கரை அளவு கணிசமாகக் குறைந்துவிடும்.

இது மூளைக்குப் புதிய உற்சாகத்தைத் தரும். அதிலும் ஒமேகா 3 அமிலம் அடங்கிய மீன் உணவுகள் மற்றும் ஒலிவ் ஓயில், கார்போஹைட்ரேட் மற்றும் ஆன்டி ஆக்ஸிடென்ட்கள் மிகுந்த தானியங்களை 5 நேரமும் உணவில் சேர்த்துக்கொண்டால் பலன் அதிகரிக்கும்.

சுறுசுறுப்பான நடைப்பயிற்சி மற்றும் சீரான உடற்பிற்சிகள் மூளைக்குத் தேவையான இரத்த ஓட்டம் கிடைக்க வகை செய்கின்றன. இதனால் அல்சீமர் எனப்படும் மூளைநோய் வரும் வாய்ப்புக் குறைந்துவிடும். உடற்பயிற்சிகள் மன அழுத்தத்தை வெகுவாகக் குறைக்கும் என்பது நீங்கள் அறிந்ததே. இதனால் மன அழுத்தத்தைத் தூண்டும் கோர்ட்டிசால் என்ற ஹோர்மோன் சுரப்பும் குறைந்துவிடும். (இந்தக் குறிப்பிட்ட ஹோர்மோன்கள் மூளையை நிப்பேராக்கி விடும் என்பது குறிப்பிடத்தக்கது).

# பெருங்குடல் புற்றுநோய் ஆபத்தை நார்ச்சத்து குறைக்காதாம்!



நார்ச்சத்து உணவுகள்- நிறைய சாப்பிடுவதன் மூலம் பெருங்குடல் புற்றுநோய் ஆபத்து குறையாது என்று அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே நடந்த 13 ஆய்வுகளின் மூலம் கிடைத்த விவரங்களை இவர் கள் அலசி ஆராய்ந்தனர். அப்போது நார்ச்சத்து உணவுகளைக் கூடு தலாகச் சாப்பிட்டவர்களுக்கும் குறைவாகச் சாப்பிட்டவர்களுக்கும் இடையே குறிப்பிடத்தக்க எந்தவித்தியாசமும் இல்லையென கண்டறியப்பட்டுள்ளது.

உதாரணத்துக்கு ஒரு நாளைக்கு 30 கிராம் நார்ச்சத்து சாப்பிட்டவர்களுக்கும், 10 முதல் 15 கிராம் வரை சாப்பிட்டவர்களுக்கும் ஒரே மாதிரியான ஆபத்தே இருந்தது. அதற்காக நார்ச்சத்தால் எந்தப் பயனுமில்லை என்று நினைக்க வேண்டாம். ஏனெனில் ஒட்டுமொத்த உடம்புக்கும், இருதயத்துக்கும் நார்ச்சத்தால் நிறைய நன்மைகள் உண்டு என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

காலி பிளவர் தக்காளி, திராட்சைப்பழம், சிவப்பு மிளகு மற்றும் கரட் ஆகியவற்றில் நார்ச்சத்து நிறைய உண்டு. ஒரு அப்பிள் மற்றும் ஆரஞ்சுப் பழத்தில் 3 கிராம் நார்ச்சத்து இருக்கிறது.

# முகத்தில் 8 கிலோ கட்டியுடன் போராடும் சிறுமி!



படத்தில் பயங்கர தோற்றத்துடன் இருக்கும் இந்தச் சிறுமியின் பெயர் மார்லி காசஸ். ஹெய்ட்டி நாட்டைச் சேர்ந்தவள். 14 வயதான இவள் கடந்த ஆகஸ்டு மாதம் வரை சாதாரண மாகத் தான் இருந்தாள். ஆனால் அதன் பிறகு திடீரென முகத்தில் பயங்கர வலி உண்டாகி கட்டி போல வளரத் தொடங்கியது.

வாய் - மூக்கு - கன்னம் மற்றும் கண்கள் என்பன எங்கு இருக்கின்றன என்று தெரியாதளவுக்குக் கட்டி பரவியதால் சிறுமி மூச்சு விடச் சிரமப்பட்டாள். கொஞ்ச நாளில் 7.250 கிலோ அளவுக்கு கட்டி வளர்ந்தது. இதைத் தொடர்ந்து சிறுமியின் நிலைமைக் கண்டு பரிதாபப்பட்ட தனியார் தொண்டு நிறுவனம் ஒன்று, அவளை மியாமியில் உள்ள கோல்ட்ஸ் குழந்தைகள் மருத்துவமனையில் கொண்டு சேர்த்தது.

அங்கு டாக்டர் ஜீசஸ் கோமஸ் தலைமையிலான மருத்துவக் குழுவினர் நடத்திய சோதனையில் பாலியோஸ்டாடிக் பைபுரோஸ் டிஸ்பிளேசியா என்ற அபூர்வமான மரபியல் நோய் சிறுமியைத் தாக்கி இருப்பது தெரிய வந்தது.

(லட்சத்து 50 ஆயிரம் பேரில் ஒருவருக்குத் தான் இந்நோய் வருமாம். அப்படியே வந்தாலும் இந்தளவுக்கு மோசமாக வளர்வது அபூர்வமாம். இந்நோய் தாக்கியவர்களின் எலும்புகளின் வளர்ச்சி விநோதமாக மாறும். ஒரு கிண்ணம் மூழுக்க ஜெலி நிரம் பியிருக்க அதனுள் ஒன்றிரண்டு எலும்புகள் இருந் தால் எப்படியிருக்குமோ அதே போன்று எலும்பு பந்து போல வீங்கி மாறிவிடும்.)

# அறிவியல் ஆயிரம்

இதையடுத்து சிறுமிக்கு உடனடியாக முதல் கட்ட அறுவை சிகிச்சை செய்து சீராக மூச்சு விடுவதற்கு வகை செய்தனர். தொடர்ந்து இன்னும் பல கட்டமாக அறுவைச் சிகிச்சைகள் செய்ய வேண்டும் என்று அவர்கள் கூறினர். அனைத்து அறுவைச் சிகிச்சைகளும் வெற்றிகரமாக முடிந்த பிறகு முகத்தின் வலது புறத்தில் பிளாஸ்டிக் சர்ஜரி செய்ய வேண்டும். அதன் பிறகே மார்லி காசஸுக்கு முழு முகம் கிடைக்கும் என அவரது தயாரிடம் தெரிவிக்கப்பட்டது.

சிறுமியின் முழு மருத்துவ சிகிச்சைகளும் முடிய 95 ஆயிரம் டொலர் பணம் தேவைப்படுமாம். எனினும் அவளது குடும்ப நிலையை கருத்தில் கொண்டு சிகிச்சைக்கு தேவையான நிதியை நன்கொடை மூலம் திரட்டுவதில் மருத்துவமனை நிர்வாகம் மும்முரமாக இறங்கியுள்ளது. இதுதவிர சிறுமியைக் குணப்படுத்த நிதி உதவி அளிக்குமாறு சர்வதேச குழந்தைகள் நிதியத்துக்கும் கோரிக்கை மனு அனுப்பியுள்ளது.

# ...பு மலர் – 25.12.2005





## ...லத்தில் சர்வதேச சமூகத்தினர் ...ா முன்னெடுக்க வலியுறுத்த வேண்டும்

...2005ஆம் ஆண்டு நத்தார் வாழ்த்துக்களை வலம்புரி
...ாசக அன்பர்கள் அனைவரிற்கும் தெரிவித்துக்கொள்ள
...ிரும்புகிறோம்.
'உன்னதங்களிலே கடவுளுககு மாட்சி உண்டா
...ுக. பூவுலகில் நல் மனத்தோருககு அமைதி உண்டா
...ுக' என்ற வானவரின் கீதத்தோடு நிகழ்ந்த இயேசு
...ின் பிறப்பு இன்று எமது மண்ணில் அதே அமைதியை
...ம் சமாதானத்தையும் வேண்டியதாகவே இருக்கிறது.
இவ்வாண்டு கிறிஸ்து பிறப்பு விழாக் கொண்டா
...ப்படுகின்ற வேளையில் இரண்டு விடயங்கள் எம் மனங்
...ளை பெரிதும் நெருடிக்கொண்டு இருக்கின்றன.
...இரண்டாவது போர் மூழுமோ என்ற ஏக்
...தின... அடுத்த தினம் நடைபெற்ற சுனாமி இய
...தன் அழிவும், தாக்கங்களும், உயிர் இழப்புக்களும்,
...க்கப்பட முடியாதவையாகவே இருக்கிறது.
...வருகின்ற வேளையில் பொருள் இழப்புக்களை மறந்
...றக்கவே முடியாது. எம்மோடு வாழ்ந்து எம்முடன்
...வர்கள் திடீரென ஒன்றும் சொல்லாமலே எதிர்பாராத
...சன்ற இழப்பு தாங்க முடியாதது. அவர்களின் ஆன்மா
...ில் அமைதியில் இளைப்பாற அவர்களுக்காக வேண்
...டமையாகும். பொருள் இழப்புக்களில் மிகவும் ஒரு
...ள் மூலம் பெற்றுக்கொண்டாலும் அவை ஒருபோதும்
... நிவர்த்தி செய்யவோ போதுமானவையல்ல. அவை
...ாயும் சிறுகச் சிறுக சேமித்த பொருள்களையும் எந்த
...லை.
...யர் பேரவையின் தலைவரான கண்டி ஆயர் மேதகு
...கை கையொப்பம் இட்ட அறிக்கை ஒன்று 'கிறிஸ்மஸ்
...பில் வழங்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் சமா
...விலகிக்கொண்டு இருக்கும் வேளையில் யுத்த நிறுத்த
...நிலையில் இவ்வாண்டு கிறிஸ்து பிறப்பு விழாவை நாம்
...்கும் ச...ானத்திற்கும் இடையில் கைவிடப்பட்ட
...கிறது. இருப்பினும் நாம் நம்பிக்கையை கைவிட
...வை முழுமையாக நமக்குத் தருவதாகத் தெரிவித்
...ு, சாமாதானம் என்பன நிறைந்த வாழ்வு. எனவே அவ
...வத்து நம்பிக்கையுடையவர்களாக இருப்போம் எனத்

...ப் புலிகளையும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை
...வண்டுகின்றோம்.
...மற்படி இரு தரப்பினரையும் அவர்களோடு இணையாத
...ுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளச் செய்வதில்
...வேண்டுகோள் விடுக்கிறோம். மேலும் இந்த இரு
...வ அடைவதற்கான பேச்சுக்களில் ஈடுபட முன்வரும்படி
...மென சர்வதேச சமூகத்தினருக்கு வேண்டுகோள்

விடுக்கிறோம்.

பேச்சுக்களை புதிதாகத் தொடங்க வேண்டும் என்கின்ற புதிய ஜனாதிபதியின் நிலைப்பாட்டை நாம் வரவேற்கிறோம். இச் செயற்பாட்டை மிக வேகமாக நடத்துவார் என எதிர்பார்த்து வேண்டிநிற்கிறோம்.

கடந்த காலத்தில் நாம் எல்லோரும் தவறுகளை விட்டிருக்கிறோம் என ஏற்றுக்கொள்ள வேண்டும். அத் தவறுகள் நிவர்த்தி செய்யப்பட்டு தீர்க்கப்பட வேண்டும். சமாதானம் எப்போதும் நீதியோடு செல்கின்ற ஒன்று. சுதந்திரம், நீதி, அடக்குமுறையற்ற தன்மை என்பன இன மத குழுக்கள் ஒன்றாக வாழுமிடத்தில் சமாதானத்தின் திறவுகோல்களாக அமைகின்றன எனவும் அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

ஆண்டவர் இயேசுவுடைய பிறப்பு விழாவைக் கொண்டாடுகின்ற வேளையில், இவ்வாண்டு நாம் செய்யவேண்டிய ஒரு நல்ல பணியை இந்த நிகழ்வு எம்மிடம் வேண்டி நிற்கிறது. எமது கிறிஸ்மஸ் விழாக் கொண்டாட்டங்கள், ஒளிவிழாக் கொண்டாட்டங்கள் என்பவற்றின் மத்தியில் சுனாமி அழிவை அனுபவித்தவர்களை மனதில் கொண்டு அன்புப் பணிகள் செய்யவேண்டிய அழைப்பே அப் பணியாகும். பரிசுப் பொருட்களையும், ஆடைகளையும், அன்பளிப்புக்களையும், பண உதவிகளையும் வழங்குவது இந்த அன்புப் பணியில் முக்கிய இடம் வகித்தாலும் இவற்றை விட இன்னும் பயன்தரக் கூடிய உதவிகளை நாம் செய்ய முடியும் என்பதையும் இங்கு மறந்துவிடக் கூடாது.

அவர்கள் அனுபவித்த துன்பங்களிலும், வேதனைகளிலும், பொருள் இழப்புக்களிலும், உயிர் இழப்புக்களிலும் அனைத்தையும் தாங்குகின்ற மன வலிமையை இறைவன் அவர்களிற்கு கொடுக்க வேண்டும். அனைத்தையும் ஏற்றுக்கொள்ளுகின்ற மனப் பக்குவத்தை இறைவன் அவர்களிற்கு கொடுக்க வேண்டும் என வேண்டிக்கொள்ள வேண்டும்.

ஆண்டவர் இயேசுவுடைய பிறப்பு விழாவினை நாம் கொண்டாடுகின்ற வேளையில் வானதூதரின் செய்தியை நாம் எப்போதும் மனதில் கொள்ள வேண்டும். 'உன்னதங்களிலே கடவுளுக்கு மாட்சி உண்டாகுக. பூவுலகில் நல் மனத்தோருக்கு அமைதி உண்டாகுக'. ஆண்டவர் இயேசு சமாதானத்தின் அரசர் என அறியப்படுகிறார். அதனால் இந்த சமாதானம் நன் மனதுள்ள அனைவருக்கும் உறுதிசெய்யப்பட்டுள்ளது. எனவே நாம் எல்லோரும் நல் மனதை மற்றவர்களிற்கு காட்டக் கூடியவர்களா என எமது மனதுகளை சோதனைசெய்து பார்க்க வேண்டும்.

**அருள் திரு ரூபன் மரியாம்பிள்ளை**

## சவால்களை எதிர்கொள்ளும் மனோதிடம் வளரட்டும்

ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் இக்காலத்திலே எல்லா மக்களுக்கும் அமைதியும் சமாதானமும் மகிழ்ச்சியும் கிடைக்க வேண்டுமென வாழ்த்துகிறோம்.

கிறிஸ்துவின் பிறப்பு மானுடத்துக்கு நம்பிக்கை தருகின்ற ஒரு மாபெரும் நிகழ்வாகும். 'மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்' என்னும் வானதூதரின் அறிவிப்பு அந்த நம்பிக்கையைப் பறைசாற்றி நிற்கின்றது.

இயேசுவின் பிறப்பு இவ்வுலகின் துன்பங்களை, கவலைகளை இல்லாமல் செய்துவிடவில்லை. மாறாக, அவற்றை எதிர்கொண்டு வாழுகின்ற துணிச்சலைத் தருகின்றது. ஏனெனில் அவர் நமக்காகப் பிறந்துள்ளார். அந்த 'இயேசு அனுபவம்' நமக்குப் பலத்தைத் தந்து பிரச்சினைகளைத் தீர்க்கும் மனோதிடத்தை அளிக்கிறது.

நமது நாட்டைப் பொறுத்தளவில் தற்போது நம்பிக்கைகள் நலிந்துபோன ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த காலத்தில் உருவாக்கப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் காலப்போக்கில் வலுவிழந்து வந்துள்ளது. தற்போது எந்த நேரத்திலும் யுத்தம் வெடித்துவிடலாம் என்று அஞ்சும் அளவுக்கு ஒரு முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு யார் காரணம் என்று ஆராய்ந்து குற்றப்பத்திரிகை வாசிப்பது தற்போதைய தேவையன்று. பரஸ்பரம் நம்பிக்கையைக் கட்டி வளர்த்து ஓர் உறுதிப்பாட்டை வளர்ப்பதே இப்போதைய அவசரத் தேவையாகும். இதற்கு அன்னவரிடத்திலும் நல்ல மனம் வேண்டும். இந்த நல்ல மனம்தான் அமைதியை அனுபவிக்கும் என்பதையே இயேசுவின் பிறப்பு தெரிவிக்கின்றது.

எனவே நமது பேச்சுக்கள், நடத்தைகள், அணுகுமுறைகள் எல்லாம் நமது நல்ல மனதை, நமது நல்லெண்ணத்தை வெளிக்காட்டுபவையாக இருக்கவேண்டும். ஏட்டிக்குப் போட்டியான செயல்பாடுகள் விரும்பத்தகாத விளைவுகளையே ஏற்படுத்திவிடும்.

இயேசுவின் பிறப்பு அன்பு, நீதி, நம்பிக்கை, மன்னிப்பு, தியாகம், பகிர்தல் போன்ற விழுமியங்களை நம்முன்னே வைக்கிறது. இயேசு வழங்கும் சமாதானத்தை, விடுதலையை நாம் இவற்றின் பின்னணியிலேயே விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஆகவே இயேசுவின் பிறப்பு விழாக் காலத்தில் அவரது பிறப்புக் காட்டும் வழியில் சமாதானத்தைக் காண முன்வருமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம். உண்மையான சமாதான வேட்கையோடு உழைக்க முன்வருவோருடன் கைகோர்த்துக்கொள்ள கிறிஸ்தவம் எப்போதுமே தயாராக உள்ளது. ஏனெனில் 'சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர் அவர்கள் கடவுளின் மக்களெனப்படுவர்'.


ஆகவே அனைத்து மக்களும் ஆவலோடு எதிர்பார்க்கும் நிலையான சமாதானத்துக்காக அனைவரும் நீதியோடு செயற்பட நமக்காகப் பிறந்துள்ள குழந்தை யேசு தமது ஆசீரை நிறைவாகப் பொழிய வேண்டுமென இறைஞ்சுகின்றோம்.

**ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை**
திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டம்.

## நத்தார் மணியோசை



நத்தாரின் நாதமணி
நான்கு திக்கும் ஓசையிடும்
உத்தான யேசு பிறப்பை
உலகெங்கும் பூசையிடும்
கிண்கிணி மணியின் ஓசை
காற்றிலே நீந்தி வரும்
விண்ணின்று எக்காளம்
வானவரால் ஏந்திவரும்
ஆலயங்கள் செல்லுந்தோறும்
அன்புறவு விளங்கி நிற்கும்
காலத்தின் குறிக்கோளை
காண்டாமணி
துலங்கவைக்கும்
ஆதவனின் வரவு கண்டு
அனைத்துலகும் விழித்து நிற்கும்
வேத நாயகர் பிறப்பினை
வீரமணி ஒலித்து நிற்கும்
விண்ணுலகும் மண்ணுலகும்
வாழ்த்துக்கள் கூறிநிற்கும்
எண்ணமெல்லாம்
மணியோசையில்
ஏற்றமிகு மகிழ்ச்சி கொள்ளும்
தெய்வமுமவர் தேவனுமவர்
தேடிவந்த செல்வமுமவர்
மெய் கூப்பி தொழவைக்கும்
மகிமை நிறை மணியோசை
நல்ல சமாதானம் கொண்டு
நற்செய்தியோடு வந்து
வல்ல யேசு பிறப்பினையே
வரவேற்கும் மணியோசை
உலகெலாம் மகிழ்ந்து நிற்கும்
உயர்வான பிறப்பினையே
நிலமதிர முழங்கி நிற்கும்
நத்தார் மணியோசை
மங்களங்கள் பொங்கி எழ
முழங்கி எழும் மணியோசை
அங்கமெலாம் சிலித்துருக
அசையும் நத்தார் மணியோசை.



ச.சேவியர் வில்பிரட்
அல்லைப்பிட்டி.

## இயல்பு நிலை தாருமையா!

அன்னை மரி திரு உதரம்
அமைந்துதித்த பாலகனே
இன்னல்களைத் தீர்ப்பதற்கு
இன்று வந்து பிறந்திடுவீர்!

மண்ணுலக மனிதர் மீட்க
மனுமகனாய் வந்தவரே
எண்ணிறைந்த பாவம் செய்தோம்
ஏற்று மீட்பைத் தாருமையா!



தினந்தினமாய் எமது மண்ணில்
தீமைகளே வளருதையா
இனப்பகையைப் போக்கி நல்ல
இயல்பு நிலை தாருமையா!

எளிமையதன் கோலம் பூண்டு
ஏழ்மையிலே வந்துதித்தீர்
விழிதனிலே விளக்கை ஏற்றும்
விடிவு வர எங்களுக்கு

ஒளிக் கதிராய் உலகினிலே
ஓட்ட வந்தீர் பாவ இருள்
அழிவு தரும் பாதையிலே
அலையும் எம்மை காருமையா!

வழி வழியாய் உம் பிறப்பை
வாஞ்சையுடன் கொண்டாடுகிறோம்
தெளிவதனை அமைதியின் மேல்
தோன்றிட நீர் செய்யுமையா!



ஆதி முதல் எமை ஆளும்
ஆண்டவனின் அருள் வடிவம் நீர்
நீதியுடன் சமாதானமதை
நிலைத்திடவே அருளுமையா!

சூரியநிலா.

# வட-கிழக்கில் தீவிர தேடுதல் நடத்த முப்படையினருக்கு மஹிந்த உத்தரவு

(கொழும்பு)


இராணுவத்தினர் மீதான அண்மைய தாக்குதல்கள் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளுடனான சந்திப்பின் போது இணைத்தலைமை நாடுகள் கேள்வி எழுப்ப வேண்டும் என்று வலியுறுத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

தேசிய பாதுகாப்புச் சபை நேற்று முன்தினம் அவசரமாக கூடி இது தொடர்பில் ஆராயந்தது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முப்படைகளின் தளபதிகள், பாதுகாப்பு அமைச்சு செயலர் உள்ளிட்டோர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

வடக்கு-கிழக்கில் தீவிர தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு முப்படையினருக்கும் பொலிஸாருக்கும் இந்தக் கூட்டத்தில் மஹிந்த உத்தரவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற)





நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் ஐந்து சந்திப்பகுதியில் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்துயாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இரு இளைஞர்களும்....

# கொழும்பில் பல தாக்குதல்களை நடத்துவதற்கு புலிகள் திட்டம்

## பாதுகாப்பு ஆலோசகர் கொட்டகதெனிய

(கொழும்பு)

தலைநகர் கொழும்பில் பல தாக்குதல்களை நடத்த தமிழீழ விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளதாக அரசாங்கத்தின் பாதுகாப்பு ஆலோசகர் ஏச். எம். ஜி.பி. கொட்டகதெனிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கொட்டகதெனிய மேலும் தெரிவிக்கையில்,

இராணுவம் மற்றும் பொலிஸாருக்கு எதிராக அண்மைக்காலமாக விடுதலைப் புலிகள தாக்குதல்களை நடத்தி யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

கொழும்பிலும் அவர்கள் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளனர்.

இதற்கான சிறப்புப் பயிற்சிகள் அவர்களது உறுப்பினர்களுக்கு தற்போது அளிக்கப்பட்டுவருவதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு நகரத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.மேலதிக தேடுதல் நடவடிக்கைகள் கொழும்பிலும் அதன புறநகர்ப் பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர்.சந்தேகத்துக்குரிய நபர்களின் நடமாட்டம் குறித்து பொது மக்கள் பொலிஸாருக்கு உடனடியாக தகவல்கள தெரிவிப்பதன் மூலம் விடுதலைப்புலிகளின் வன்முறைச செயல்களை முன்னரே கட்டுப்படுத்த முடியும் என்று கூறியுள்ளார். (ற)

### இறுதியாண்டுப் பரீட்சைகள் ஒத்திவைப்பு

யாழ். பல்கலைக்கழக சமூகம் மீது படையினர் மேற்கொண்ட தாக்குதலை கண்டிததும் இந்த சம்பவம் குறித்து சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டும் கிழக்கு பல்கலைக்கழக கல்விசார், கல்விசாரா ஊழியர்கள் மேற்கொண்டுவரும் பகிஷ்கரிப்பு போராட்டம் தொடர்வதனால் பல்கலைக்கழகத்தின் இறுதியாண்டு பரீட்சைகள் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கபட்டுள்ளன.

இதேவேளை, எதிர்வரும் 27ஆம் திகதி பீடாதிபதி, விரிவுரையாளர்கள் ஆகியோா கூடி பரீட்சைகள் நடாத்தப்படும் திகதியை ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விரிவுரைகளும் நிறுத்தப்பட்டுள்ளமை தெரிந்ததே. (ற-8)





நீர்வேலி கரந்தன் சந்தியில் வியாழக்கிழமை நள்ளிரவு இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய இளம் குடும்பஸ்தர்கள்.

(படங்கள்:-பாலமுருகன்

# "முதுகில் சன்னம் துளைத்ததும் குருதி பாய்ந்தது"

## -காயமடைந்த ஜெயப்பிரகாஷ்

நீர்வேலி-கரந்தன் சந்தியில் நேற்று முனதினம் நள்ளிரவு 1.00 மணியளவில் ஓட்டோ ஒன்றின் மீது இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் கணவனும் மனைவியும் காயமடைந் தனர்.

உரும்பிராயைச் சேர்ந்த க.ஜெயப்பிரகாஸ் (வயது 23) இவரது மனைவி ஜெ.கேதினி (வயது 20) ஆகியோரே இத்தாக்குதலில் காயமடைந்து யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாக ஆட்டோச் சாரதியான கி.ஜெயப்பிரகாஸ் வலம்புரிக்குத் தெரிவிக்கையில்,தனது 11மாதக் குழந்தைக்கு சுகவீன காரணமாக நள்ளிரவு 1.00மணியளவில் நீர்வேலி கரந்தன் சந்தியூடாக கோப்பாய் வைத்தியசாலைக்குச் செல்லும் போது கரந்தன சந்தியில் உள்ள இராணுவத்தினர் துப்பாக்கியினால் எனது ஆட்டோவின் மூன்று சக்கரங்களுக்கும் சுட்டனர்.

பின்னர் என்னை நோக்கியும் சுட்டனர் எனது முதுகில் சன்னம் துளைத்ததும் குருதி பாய்ந்தது. மனைவிக்கு முழங்காலில் காயம் ஏற்பட்டது. வெற்று சக்கரங்களுடன் நான் மீண்டும் காலை 6.00மணிக்கு யாழ். போதனாவைத்தியசாலைக்குச் சென்றேன். குழந்தையை எனது மனைவி மடியில் அணைத்து வைத்திருந்தமையால தெய் வாதீனமாக குழந்தைக்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றார். (ற-39)





கிறிஸ்துமஸ் பண்டிகை இன்று கொண்டாடப்படும் நிலையில் யாழ். குடாநாட்டின் அசாதாரண நிலைமைகளால் குடாநாட்டு வியாபார நிலையங்களில பண்டிகை வியாபாரம் வழமையை விட களை இழந்துள்ளது. நேற்று யாழ்.நகரில் க்ளிக் செய்யப்பட்ட படங்கள் இவை. (படங்கள்:- பாலமுருகன்)

# கல்வியூட்டல் நடவடிக்கைகள் இயல்புக்கு திரும்பவில்லை

## சிறுவர் பாதுகாப்பு இல.அமைப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட இடங்களிலுள்ள மாணவர்களுக்கான கல்வியூட்டல் நடவடிக்கைகள் இன்னமும் இயல்பு நிலைக்கு திரும்பவில்லையென சிறுவர் பாதுகாப்பு இலங்கை அமைப்பு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம்,அம்பாந்தோட்டை, காலி மற்றும் அம்பாறை ஆகிய இடங்களில் சுமார் 230 மாணவர்கள் மத்தியில் இவ் அமைப்பு நடத்திய ஆய்வின் போது அதில் பெரும்பாலான பாடங்களுக்கு இன்னமும் உரிய ஆசிரியர்கள் இல்லை என்ற விடயம் தெரியவந்துள்ளது.

அதேவேளை,அடிப்படைக்கல்வி வசதிகளும் செய்து கொடுக்கப்பட வில்லை என்றும் அதன் மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த வருட ஆழிப்பேரலையின் போது நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்து 372 மாணவர்கள் பலியாகினர். 6 ஆயிரத்து 610 மாணவர்கள் அவயவங்களை இழந்தனர். 50 ஆயிரம பேர் வரை தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறினார். 126 ஆசிரியர்கள் பலியாகியுள்ள அதேநேரம் 331 ஆசிரியர்கள தமது அவயவங்களை இழந்தனர்.

மேலும் 180 பாடசாலைகள் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டுள்ளன. 446 பாடசாலைகள் இடம் பெயர்ந்த மக்களின் முகாம்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்று அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (ற-9)

புலமைப் பரீட்சை
மாதிரி வினாத்தாள்

2006இல் 5ந் தரப் புலமைப் பரீட்சைக்குத் தோற்றும்
மாணவர்களே! உங்கள் நன்மை கருதி
2006 ஜனவரி முதல் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும்

புலமைப் பரீட்சை
மாதிரி வினாத்தாள்

உங்கள் வலம்புரியில் வெளிவரும்!
வாங்கத் தவறாதீர்கள்!

# திருநீறு தயாரிக்கும் அற்புதப் பணியில் காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயம்

சிவ சின்னங்களில் ஒன்று திருநீறு. சைவ மக்கள் தங்கள் நெற்றியில் திருநீறு பூசிக்கொள்வதனூடாக தமது சமயத்தை வெளிப்படுத்திக்கொள்வர்.

பெற்ற தாய்க்கு ஈடாகப் போற்றப்படும் பசுவின் சாணத்தால் தயாரிக்கப்பட்ட திருநீறு பிணி நீக்கவல்ல மாமருந்து என்பதை நம் முன்னோர்கள் அனுபவத்தில் கண்டுள்ளனர்.


'மகாராணி' சோமசேகரம்

அதனாலன்றோ "நீறில்லா நெற்றி பாழ்"

என்று ஔவையும் கூறி வைத்தார்.

"மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு"

என்ற திருஞானசம்பந்தரின் திருப்பதிகம் திருநீற்றின் பெருமைக்கு கட்டியம் கூறுவதாகவுள்ளது.

இத்தகைய தெய்வீகம் பொருந்திய திருநீறு இன்று வியாபாரப் பண்டமாகி விட்டது.

ஒரு காலத்தில் இந்துக்களின் வீடுகளில் பசுச்சாணம் எடுத்து அதனை வராட்டியாகத் தட்டி காயவைத்து அனலில் இட்டு திருநீறாக்கிய கலாசாரம் இன்று மலையேறிப் போயிற்று.

இப்போதெல்லாம் விற்பனைக்காக தயாரிக்கப்பட்ட பைக்கற் திருநீற்றுக் கலாசாரம்.

வியாபாரம் என்றால் கலப்படம் இருக்காமலா போகும். கலப்படத்தை ஏற்றுக் கொண்டாலும் இந்த நாட்டில் இருக்கக்கூடிய முதலாவது மோசடி வியாபாரம் திருநீறாகவே இருக்கும்.

உமியை எரித்து அதன் சாம்பலையும், வெண்மையான மக்கி மண்ணையும் அள்ளி பைக்கற்றுக்களில் அடைத்து திருநீறு என்ற பெயரில் விற்பனை செய்யும் கொடிய பாவம், சிவபூமி யென்னப் போற்றப்பட்ட எம் ஈழத்து மண்ணில் நடை பெறுவது வேதனைக் குரியது.



### ஏன் இந்த நிலை

பசுச் சாணத்தால் உரிய விதிமுறைகளுக்கு அமைய தயாரிக்கப் படவேண்டிய திருநீற்றை வியாபாரப் பொருளாக்கிய பெருமை சைவ ஆலயங்களுக்கும், சைவ அமைப்புகளுக்குமே உண்டு.

சைவ ஆல்யங்களும், சைவ அமைப்புகளும் திருநீற்றைத் தயாரித்து வழங்கி யிருந்தால் உமிச்சாம் பலையும், மக்கி மண்ணையும் ''சிவ சிவ'' என்றவாறு நெற்றியில் பூசும் பெரும் பாவம் தவிர்க்கப்பட்டிருக் கும்.

சைவ மக்கள் நெற்றியில் நீற ணிய வேண்டுமென விரும்பும் அதேவேளை,தூய்மையான சாணத்தால் தயாரிக்கப்பட்ட திருநீறு அடியார்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்வதும் அவசியமல்லவா?



### முன்மாதிரியான செயற்பாடு

திருநீற்றில் இருக்கக்கூடிய கலப் படத்தை சங்காரம் செய்யும் முன்மா திரியாக காரைநகர் வியாவில் ஐயனார் கோவில் அறங் காவலர் பசுச் சாணத்தால் உரிய விதி முறைகளை அனுசரித்து திரு நீற்றைத் தயாரிக்கும் பணியை செய்து வருகின் றனர்.

கோவில் ப்சுவின் சாணத்தை எடுத்து அதனைத் திருநீறாக்கி அடியவர்களுக்கு வழங்கும் காரை நகர் வியா வில் ஐயனார் கோவில் தர்மகர்த்தா "மகாராணி" சோம சேகரம் அவர்களின் பணி அற்புதமானது.

வியாவில் ஐயனார் கோவிலில் திருநீறு தயாரிக்கும் பணியை பார்ப்பதற்காக அங்கு நேரில் சென்றோம்.

ஆலய தர்மகர்த்தா "மகாராணி" சோமசேகரம் அவர்கள் திருநீறு தயாரிக்கப்படும் இடத்தைக் காண்பித்தார்.ஆச்சரியமாக இருந்தது.

கோவில் பசுக்களைப் பராமரிப்பதிலும், திரு நீறு தயாரிப்பதிலும் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

திருநீற்றுத் தயாரிப்பில் செலவு இருக்கின்ற போதிலும் தயாரிக்கப்பட்ட திருநீறு இலவசமாகவே வழங்கப் படுகின்றது.

இன்றைய காலத்தின் தேவையை உணர்ந்து திருநீற்றின் மகிமையைப் புரிந்து ஆலயத்திலேயே திருநீறு தயாரித்து அடியவர்களுக்கு வழங்கும் காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தின் அற்புதப் பணியை ஏனைய ஆலயங்களும் பின்பற்றினால் திருநீற்றின் பயன் நமக்குக் கிடைக்கும் என்பது உறுதி.

**விஜயன்**

---

### இரண்டு மாதங்கள் தொடர்ச்சியாக

## மின்கட்டணம் செலுத்தப்படாவிடின் மின்விநியோகம் துண்டிக்கப்படும்

(கொழும்பு)

இரணடு மாதங்கள் தொடர்ச்சியாக மின்கட்டணம் செலுத்தாது விட்டால் விநியோகம் துண்டிக்கப்படும் என்று மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் ஜோன் செனிவிரட்ண தெரிவித்துள்ளார்.

அரச அலுவலகங்கள், வைத்தியசாலை ஆகியவையே கூடுதலான மின்கட்டணம் செலுத்தாமல் இருக்கின்றன.

மின் கட்டணங்களை செலுத்தாத அரச நிறுவனங்கள் தொடர்பான விபரங்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் அவ்வாறான சில நிறுவனங்களுக்கான மின் விநியோகங்கள் துண்டிக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

மின்கட்டணங்கள் செலுத்தப்படாமையினால் மின்சாரசபை பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது.

இதேவேளை, கிராம மின் திட்டங்களுக்கு உதவி வழங்க உலகவங்கி மற்றும் சீனா., சுவீடன் ஆகிய நாடுகள் முன் வந்துள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

(ந-9)

## புதிய இராணுவப் பேச்சாளராக பிரிகேடியர் பிரசாந்த் பதவியேற்பு

(கொழும்பு)

புதிய இராணுவப் பேச்சாளராக பிரிகேடியர் பிரசாந்த் சமரசிங்க நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை முதல் நியமிக்கப்பட்டுள்ளார். இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா இவருக்கு இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

இராணுவத்தினரின் 10ஆவது இராணுவப் பேச்சாளராகப் பதவி நியமனம் பெற்றுள்ள இவர் இராணுவ ஊடகப் பிரிவில் மாற்றங்கள் பலவற்றைக் கொண்டு வரவுள்ளதாக இராணுவத் தலைமையக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இராணுவ சமிக்ஞை படைப் பிரிவின் 222ஆவது பிரிகேட்டின் தலைமை அதிகாரியாக திருமலையில் இவர் இறுதியாகக் கடமையாற்றியிருந்தார்.

இதேவேளை, 9ஆவது இராணுவப் பேச்சாளராக இருந்த பிரிகேடியர் தயா ரட்ணாயக்க மேலதிக இராணுவ கற்கைநெறி ஒன்றுக்காக வெளிநாடு சென்றுள்ள நிலையில தற்காலிக இராணுவப் பேச்சாளராக இருந்து வந்த பிரிகேடியர் நவின் விதாரண படைப்பிரிவு ஒன்றின் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)


## புதுமனை கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி கிழக்கில் ஜே/394 கிராம அலுவலர் பிரிவில் சுனாமி புதுமனை கையளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பொலிகண்டி கிழக்கு சமூக அபிவிருத்தி மன்றத்தலைவர் செ.இராஜசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர். க.கணேஷ் பிரதம விருந்தினராகவும்,பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், ஐக்கிய நாடுகளின் வதிவிட நகர முகாமையாளர் க. பரமேஸ்வரன், சுனாமி செயலக நிர்வாக உத்தியோகத்தர் இ. சந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ந-9)



உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையில் அண்மையில் இடம்பெற்ற மாணவர் தலைவர்களுக்கு சின்னஞ்சூட்டு வைபவத்தில், மாணவர் தலைவர்களுடன் அதிபர் க.ஆனந்தராசா மற்றும் உப அதிபர் திருமதி பு.மனோகரன் ஆகியோர் காணப்படுகின்றனர்.



மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்ற துரைசிங்கம் ரகுவுக்கு அண்மையில் பண்ணாகத்தில் நடைபெற்ற பாராட்டு வைபவத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியர் கி. ஞானச்சந்திரமூர்த்தியும் அவர் பாரியாரும் பாராட்டுப்பத்திரம் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## தசரதர் செய்த சபதம்!

வாழ்க்கையில் ஒரு சில சந்தர்ப்பங்களில் நாம் சில அவமானங்களைச் சந்தித்தே தீரவேண்டியிருக்கிறது என்ன செய் வது? காலம் அப்படி! அவமானப்படுபவர்கள் உடனே அடங்கிப் போவது தான் பொதுவாக உலக வழக்கம்.

அவமானப்பட்டால் உடனே சீறி எழுபவர்களும் உண்டு! தங்களுக்கு ஏற்பட்ட அவமானத்தையே ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு சிலர் வாழ்க்கையில் முன்னுக்கு வருவதும் உண்டு. ஆனால் அப்படிப்பட்டவர்கள் மிகவும் அபூர்வம் என்று தான் சொல்லவேண்டும்.

சாணக்கியன் தனக்கு ஏற்பட்ட ஓர் அவமானம் காரணமாக ஒரு சரித்திரத்தையே படைத்துக் காட்டியதை வரலாற்றில் படிக்கிறோம். இன்றைக்கு மனோதத்துவ நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

"அவமானப்பட்டால் உடனே அடங்கிப் போய்விடக் கூடாது. அதையே ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு மனதில் ஒரு வைராக்கியத்துடன் முயற்சி செய்தால் வாழ்க்கையில் எல்லோருமே முன்னேறலாம் என்கிறார்கள்.

அவமானம் என்பதை நாம் "வைராக்கியம், மனு உறுதி, ஊக்கம்" என்று மாற்றிக்கொள்ள வேண்டும்.அதுதான் வெற்றிக்கு வழி!

ராமர் ஒரு வைராக்கியம் காரணமாகத் தான் இந்த உலகில் பிறந்தார் என்று ஒரு கதை உண்டு. அந்தக் கதை இதுதான்.

"தசரதருக்கு ராமர் குழந்தையாக வந்து பிறக்க வேண்டும். அப்போதுதான் இங்கே இருக்கும் எல்லாக் கஷ்டங்களும் நீங் கும்" என்று சர்வலோகமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

ஆனால் ராமர் எப்போது வந்து பிறப்பார் என்று யாருக்கும் தெரியவில்லை. அந்தக் காரியம் விரைவில் நடைபெற வேண்டுமே அதற்கு என்ன செய்வது?

நாரதர் ஒருநாள் தசரதரைத் தேடி வந்தார். "தசரதா! உனக்கு ஒரு செய்தி தெரியுமா?" என்று ஆரம்பித்தார்.

அவர் எப்போதும் இப்படித்தானே ஆரம்பிப்பது வழக்கம்!

"என்ன விஷயம்?" என்று கேட்டார் தசரதர்.

"தசரதா! நீ அடிக்கடி உன்னுடைய தேரில் ஏறிக்கொண்டு தேவலோகத்திற்குப் போகிறாய்-வருகிறாய் அதெல்லாம் சரி தான்! தேவலோகத்திலும் உன்னை நல்லபடியாகத்தான் வரவேற்கிறார்கள். தேவேந்திரன் உன்னை அன்புடன் அழைத்துக் கொண்டுபோய் தன்னுடைய அரியாசனத்திலேயே தனக்குப் பக்கத்திலேயே உட்கார வைக்கிறான். நீயும் மகிழ்ச்சியுடன் உட்கார்ந்து அவனுடன் பேசிவிட்டு வந்து விடுகிறாய். ஆனால் நீ இங்கே வந்ததற்குப் பிறகு அங்கே என்ன நடக்கிறது என்பது உனக்குத் தெரியுமா?" என்று வினவினார் நாரதர். "என்ன நடக் கிறது? எனக்கு அதைப் பற்றி ஒன்றும் தெரியாதே!" என்றார் தசரதர்.

நாரதர் தசரதரின் அருகில் வந்து மெதுவாக அவர் காதோடு காதாகச் சொன்னார். "நீ அங்கே தேவேந்திரனுடன் உட்கார்ந்து பேசிவிட்டு வந்த பிறகு நீ அங்கே உட்கார்ந்திருந்த அரியாசனத்தைத் தண்ணீர் ஊற்றி கழுவிச் சுத்தப்படுத்துகிறார்கள்! நீ என்ன அந்த அளவுக்கு சுத்தமில்லாத ஆளா?" என்று கேட்டார்.

தசரதருக்கு இது மிகவும் அவமானமாகப் போய்விட்டது. "அப்படியா செய்கிறார்கள்?" என்று கேட்டார்.

"ஆமாம்! நீ வேண்டுமானால் நான் சொல்வது உண்மையா இல்லையா என்று சோதித்துப் பார்த்துக்கொள்" என்றார் நாரதர்.

உடனே தசரதர் இதற்காகவே புறப்பட்டு தேவலோகம் சென்றார்.அங்கே வழக்கம் போல் இவரை வரவேற்று உட்கார வைத்து பேசிக்கொண்டிருந்தான் தேவேந்திரன்.

சிறிது நேரம் பேசிக்கொண்டு இருந்துவிட்டு "சரி... நான் கிளம்புகிறேன்" என்று புறப்பட்டார் தசரதர்.

தேவேந்திரனும் வாசல்வரை வந்து தசரதரை வழியனுப்பி வைத்துவிட்டு உள்ளே சென்றான்.

தசரதர் வெளியிலேயே சிறிதுநேரம் மறைந்திருந்துவிட்டு மெது வாக உள்ளே என்ன நடக்கிறது என்று எட்டிப் பார்த்தார். நார தர் சொன்னது சரிதான்! தசரதர் உட்கார்ந்திருந்த ஆசனத்தை அங்கே இரண்டு தேவர்கள் கழுவிச் சுத்தப்படுத்திக் கொண்டி ருந்தார்கள்!

தசரதரால் இதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவருக்கு மிகவும் அவமானமாகிவிட்டது. நேராகக் கிடுகிடுவென்று தேவேந்திரனிடமே சென்றார்.

"நான் உட்கார்ந்திருந்த இருக்கையை இப்படிக் கழுவிச் சுத்தப்படுத்துகிறாயே! நான் என்ன அந்த அளவுக்குப் பாவியா?" என்று மிகவும் கோபத்துடன் கேட்டார். "தசரதரே!! மனிதனாகப் பிறந்தவனுக்கு மூன்று கடன்கள் உண்டு. அவற்றை தேவகடன், ரிஷிகடன், பித்ருகடன் என்று சாஸ்திரங்கள் குறிப்பிடுகின்றன. இவற்றைத் தீர்க்காதவன் பாவியாகிறான்.

இவற்றில் தேவர்களைப் பூஜிப்பதால் தேவகடன் தீருகிறது. ரிஷிகள் எழுதிய அருள்நூல்களைப் படிப்பதாலும், கேட்பதா லும் ரிஷிகடன் தீரும். மகான்களின் ஆசீர்வாதத்துடன் தவம் செய்து உத்தமனாக நல்ல ஒரு மகனைப் பெறுவதால் பித்ரு கடன் தீருகிறது. உனக்கு அப்படி ஒரு மகன் இல்லை! அத னால் நீ பாவியாகிறாய் பாவி உட்கார்ந்திருந்த இடம் என்பதால் அதைக் கழுவிச் சுத்தம் செய்ய "வேண்டியது எங்கள் கடமை!" என்றான் தேவேந்திரன்.

இந்த இடத்தில்தான் தசரதருக்கு ஏற்பட்ட அவமானம் ஒரு வைராக்கியமாகவே மாறியது!

"தேவேந்திரா! நன்றாகக் கேட்டுக்கொள். எல்லா வகையிலும் உத்தமனான ஒரு மகனைப் பெற்ற பிறகுதான் இந்தச் சபையில் மறுபடியும் நான் அடியெடுத்து வைப்பேன்!" என்று தசரதர் கூறிவிட்டுச் சென்றார்.

பிறகு அவர் புத்ரகாமேஷ்டி யாகம் செய்தார். பிள்ளைகள் பிறந்தார்கள்.இந்தக் கதையில் இருக்கும் கருத்து என்ன வென்றால் தேவேந்திரன் தசரதரை அப்படி அவமானப்படுத் தாவிட்டால் தசரதருக்கு இப்படி ஒரு வைராக்கியம் பிறந்திருக் குமா? யோசித்துப் பாருங்கள்.நமக்கு ஏற்படும் சில அவமானங்களையும் வைராக்கியங்களாக மாற்றிக்கொள்வோம் வாழ்க்கையில் முன்னேறுவோம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஐ.தே.கவுடன் இணைந்து வட-கிழக்கு பிரச்சினைக்கு பரிகாரம் காண முடியும்

## -ஜனாதிபதி மஹிந்த நம்பிக்கை



(கொழும்பு)

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்வதற்கு இன்னும் சில நாட்களே இருக்கும் நிலையில், தனக்கு இந்தியாவிலுள்ளது போன்ற அதிகாரப்பரவல் முறையை மேலும் ஆராய்வதற்கு ஆர்வமுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள இந்தியச் செய்தியாளர்கள் மத்தியில் உரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இந்தியாவில் உள்ள அதிகாரப்பரவலாக்கம் எவ்வாறு தொழிற்படுகிறது? என்பதை அறிவதில் ஆர்வமாக உள்ளது" என அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவிக்கையில்,

மலையகத்தில் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கிய ஒரு வைத்தியசாலையையும், தென்னிலங்கையில் தகவல்தொழில்நுட்ப பூங்கா ஒன்றினையும் அமைத்துத் தருமாறு நான் இந்தியாவிடம் கேட்பதற்கு எதிர்பார்த்துள்ளேன்.

இலங்கையின் இனப்பிரச்சினை விவ்காரத்தில் மேலும காத்திரமான பங்கினை இந்தியா வகிக்க வேண்டும்.

பிரஸெல்ஸில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் இந்தியாவின் பிரதிநிதியும் பங்குபற்றியமை இந்திய இலங்கை விடயத்தில் முக்கிய பங்கு வகிக்க தயாராகி வருவதையே காட்டுகிறது என்றார்.

மேலும் சமாதான அனுசரணையாளராகச் செயற்படுவதற்கு நோர்வே நிபந்தனைகளை விதிப்பதாக எழுந்துள்ள பேச்சுக்கள் பற்றி குறிப்பிட்ட அவர், இலங்கை மீது எந்தவொரு வெளியாரும் நிபந்தனைகளை விதிக்கமுடியாது என்றார்.

ஒட்டுப்பண்டகளின் செயற்பாடுகள் பற்றி கேட்ட போது, அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அக் குழுக்களின ஆயுதங்கள் களையப்பட்டேயிருக்கின்றன எனத் தெரிவித்த அவர், தனது அரசு பிரதான எதிர்க்கட்சியுடன் இணைந்து வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு பரிகாரம் காணமுடியும் என்று தான் நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

(ற-6)

# யாழில் இடம்பெறும் இராணுவ அராஜகங்களுக்கு வவுனியா மக்கள் அமைப்புகள் கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி சமூகத்தினர் மீதான ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் வன்முறைகளுக்கு வவுனியா மக்கள் அமைப்புக்கீள் கண்டனம் தெரிவித்துள்ளன.

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக முதுகல்வியியல் மானிப் பட்டப்படிப்பு மாணவர்கள் சங்கம், வவுனியா மாவட்ட மாதர் சங்கங்களின் ஒன்றியம், வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஆகயன வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில்,

புங்குடுதீவில் கடற்படையினர் மேற்கொண்ட பாலியல் படுகொலையையும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்,விரிவுரையாளர்கள், துணைவேந்தர் மற்றும் செய்தியாளர்கள் மீது இராணுவத்தினர் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதல்கள், துப்பாக்கிப் பிரயோகம் என்பவற்றையும் நாம் கண்டிக்கிறோம்.

இந்தச் சம்பவங்களில் சம்பந்தப்பட்ட கடற்படையினர், இராணுவத்தினரை இனம்கண்டு அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பலகலைக்கழகம் என்பது சமூகத்தில் ஓர் உயர்ந்த உன்னதமான மதிப்புக்குரிய நிறுவனமாகும். அதன் நிர்வாகியான துணைவேந்தர், பேராசிரியர்கள், மாணவர்கள் மட்டுமல்லாமல் அவர்கள் நடத்திய அமைதிப் பேரணியின் போது செய்தி சேகரிப்பதற்காகச் சென்ற செய்தியாளர்களும் தாக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய நாகரிகமற்ற செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கையும் எடுக்க வேண்டும்.இத்தகைய கண்மூடித்தனமான தாக்குதல்கள் சமாதானத்தின் மீதான இறுதி நம்பிக்கையையும இழக்கச் செய்துள்ளது என்பதுடன் போராடுவதைத் தவிர வேறுவழியில்லை என்ற நிலைமையை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் அடக்குமுறைக் கலாசாரத்தின் ஒரு வடிவமாகவே காலம் காலமாக தமிழ்ப் பெண்கள் மீது பாலியல் வன்முறைகளும் கொலைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இது போர்நிறுத்த ஒப்பந்த காலத்திலும் தொடர்வதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

தமிழர் பிரதேசமெங்கும் பாடசாலைகள், பொதுக் கட்டடங்கள் என்பன இராணுவ முகாம்களாக்கப்பட்டுள்ளதுடன்,எங்கும் இராணுவக் காவலரண்கள் அமைக்கப்பட்டிருப்பதும் இதற்கு முக்கிய காரணமாகும். பாடசாலைகளிலும்,பொதுக்கட்டடங்களிலும் தொடர்ந்து படையினர் நிலைகொண்டிருப்பது போர் நிறுத்த ஒப்பந்தச் செயற்பாடுகளுக்கு முரணானதாகும்.

எனவே, இவ்விடங்களை விட்டு இராணுவம் உடனடியாக வெளியேற்றப்படவேண்டும். புங்குடுதீவில் இளையதம்பி தர்சினி மீது மேற்கொள்ளப்பட்ட பாலியல் வன்முறைக்கும் அவரது கொலைக்கும் காரணமானவர்களுக்கு உடனடியாக தண்டனை வழங்கப்பட வேண்டும். இல்லையேல் தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் இராணுவத்திற்கு எதிரான போராட்டம் தமிழ்ப் பெண்கள் அமைப்புக்களினால் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற)

# கடற்படையின் பாஸ் நடைமுறையால் கடற்றொழிலாளர்கள் கடும் சிரமம்

(பொன்னாலை)

பொன்னாலை-கடற்பரப்பில் தொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளர்களுக்கு கடற்படையினர் விதிக்கின்ற பாஸ் நடைமுறைகளால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

புதிய பாஸ் ஒன்று எடுப்பதாக இருந்தால் மூளாயில் காவலரண் அமைத்திருக்கின்ற கடற்படையின் மக்கள் தொடர்பாளருக்கு சமர்ப்பிப்பதற்கு ஆங்கிலத்தில் கடிதம் எழுதி அதில் கிராமசேவையாளரதும்பிரதேச செயலரதும் ஒப்பங்கள் பெறப்பட்டு வழங் கப்படவேண்டும்.அத்தோடு அக் கடிதத்தை வட்டுக் கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் காண்பித்து பொலிஸ் அறிக்கையினையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.அதன்பின்பு கடற்றொழில் சங்கத் தலைவரின் ஒப்பம் பெறப்பட்டு விண்ணப்பதாரியின் புகைப் படங்களுடன் அந்தக் கடிதத்தினை மக்கள் தொடர்பாளரிடம் வழங்கவேண்டும்.இந் நடைமுறைக ளின் பின்னர் இரண்டு கிழமைகள் அல்லது ஒரு மாதத் தின் பன்பு பாஸ் வழங்கப்படும்.

இத்தனை சிரமங்களுக்கு மத்தியில் ஒரு பாஸை பெற்றுக்கொள்ளும் கடற்றொழிலாளி சுகயீனம் காரணமாகவோ அல்லது முக்கிய காரணங்களுக்காகவோ தொடர்ச்சியாக ஒரு மாதங்களுக்கு மேல் தொழிலுக்கு போகாவிடின், மீண்டும் புதிய பாஸுக்கு விண்ணப்பித்து பாஸை பெற்றுக்கொண்ட பின்னரே கடலுக்குள் இறங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையுள்ளது.

கடற்படையினரின் இத்தகைய கெடுபிடிகளால் மனம் நொந்துபோகும் தொழிலாளர்கள் இந் நடைமுறை குறித்து விசனமும்-கவலையும் தெரிவிக்கின்றனா .

(ற-49)



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய பரிசளிப்பு விழாவில் வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். அருளானந்தம் உரையாற்றுவதையும், திருமதி எஸ்.சாரதாதேவி பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பரு.நிருபர்)

மனம் சாந்தமாயும் சமாதானமாயும் இருக்க வேண்டுமானால் அதை அறிவுள்ள உயர்ந்த எண்ணங்களைக் கொண்டு நிரப்பவேண்டும்.

-ஆவ்பரி

வலம்புரி

## மனுக்குலத்தை மீட்க யேசுபாலகனே வருக

மனுக்குலத்தின் பாவத்தைப்போக்க இப்பாரினில் வந்துதித்த யேசுபாலனின் பிறப்பு இன்றாகும்.

உலகம் முழுவதிலுமுள்ள கோடிக்கணக்கான கிறிஸ்தவ மக்கள் யேசுபாலனின் பிறப்பைக் கொண்டாடுகின்றனர்.

மனுக்குலத்தை மீட்க பாரினில் வந்துதித்த யேசுபாலனின் பிறப்பை உலகம் முழுவதும் கொண்டாடுகின்ற போதிலும் யேசுவின் போதனைகள்,அவர் காட்டிய பாதைகள் எவ்வளவு தூரம் மானிடத்தால் போற்றப்படுகின்றது-பாதுகாக்கப்படுகின்றதென்ற கேள்விகள் எழவே செய்கின்றன.

மன்ணில் நல்ல வண்ணம் வாழவேண்டிய மனித சமூகம் சீரிய பாதையை தவறவிட்டு மந்தைக்கூட்டமாக அலைந்தபோது மானிடத்தை மீட்டெடுப்பதற்காக உதித்த யேசுபாலகன் மனிதர்களின் பாவச்சுமைகளை தானே சுமந்தார்-சிலுவையில் அறையப்பட்டார்.

அவர் சிந்திய குருதி இந்த வையகத்தை புனிதப்படுத்தியது. மானிடத்தை இறைவன்பால் ஈர்த்தது. அவரின் இவ் புனிதப்பணி நமக்கெல்லாம் ஓர் செய்தியை உரைத்து நிற்கிறது. எனினும் இதனை நாம் மறந்துவிட்டோம்.

சுயநலமும் -மதவாதமும் மேலோங்கி விட்டது. பாவச்சுமைகளால் மனித இனம் நசுங்கிப் போயுள்ளது. மீட்பர் யாருமின்றி மனித இனம் இருள்சூழ்ந்த பாவக்குகைக்குள் அலைந்து திரிகிறது.

எங்கும் மனிதக்கொலைகள்-சுரண்டல்கள் -ஏழைகளின் அவலக்குரல்கள்-பணக்காரர்களில் திமிறல்கள்-ஆண்டான் அடிமை முறைகள்-இன மொழி மத நிறபேதங்கள்-எந்த வகையிலும் நிம்மதியற்ற வாழ்க்கை வையகத்தில் மகிழ்வோடு வாழவேண்டிய மனிதர்கள் இவ்வாறு அவலப்பட்டு ,அல்லல்பட்டு ஆற்றழிவதற்கு காரணம்தான் என்ன?

ஆம் , மனித இனத்தை மீட்க வந்த மீட்பரின் போதனைகள் பெட்டிக்ளுக்குள் பூட்டப்பட்டு விட்டன.

உன்னைப்போல் பிறரையும் நேசி என்ற உயர்ந்த வாசகம் கட்டட வாசல்களை அலங்கரிக்கும் வார்த்தைக் கோலங்களாக மாறி விட்டன.

மனித மனங்கள் அழுக்காறு -அவா -வெகுளி- இன்னாற்சொல் என்ற பாவ விலங்கிற்குள் அகப்பட்டு விட்டது. அதனால் இறையருள் -சகோதரத்துவம் என்ற உயரிய எண்ணக்கருக்கள் மறைந்து வெறும் எழுத்துருவங்களாக மாறிவிட்டன.

மண்ணில் நல்ல வண்ணம் வாழவேண்டிய மனித இனம் பாவத்தின் விதைப்புக்களை செய்வதால் வாழ்வின் மகத்துவம் அர்த்தமற்று போய் விட்டது.

எம்மைப்போல் மற்றவர்களும் வாழவேண்டுமென்ற யேசுகிறிஸ்துவின் உயரிய சிந்தனை உலக மாந்தரிடையே ஏற்படவேண்டும். எனவே இந்த உலகம் மீளவேண்டுமாயின் சமாதானம் நிலைக்கவேண்டுமாயின் யேசுபாலன் மீண்டுமோர்தடவை இந்த வையகத்தில் உதிக்க வேண்டும். இதற்காக நல்ல உள்ளங்கள் தேவகுமாரனை இறைஞ்ச வேண்டும்.

### குடாநாட்டின் அசம்பாவித நிலைமைகளால்

# தொ.நு. கல்லூரிகளின் இறுதிப்பரீட்சைகளை ஒத்திவைக்க மாணவர் ஒன்றியம் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு அசம்பாவிதங்களால் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதிப் பரீட்சைகளை ஒத்திவைப்பதென தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் ஒன்றியம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ள சமாதான காலத்தில் யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலமாக எமது தமிழ் மாணவர்களின் மீதும், தமிழ் மக்கள் மீதும் இராணுவத்தினராலும் அவர்களின் அடிவருடிகளாலும் மேற்கொள்ளப்படும் இராணுவ அராஜகங்களும் யாவரும் அறிந்ததே. இதற்கு முற்றுப்புள்ளி கண்டு குடாநாட்டில் சுமுக நிலையை ஏற்படுத்துவதற்காக குடாநாட்டின் உயர்கல்வி நிறுவனங்கள் அனைத்தும் தமது சகல கல்விச் செயற்பாடுகளையும் இடைநிறுத்தி இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன. எனவே தொழில்நுட்பக் கல்லூரியும் இவற்றில் உள்ளடக்கப்பட்டு பங்களிப்பை வழங்குகின்றது.

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் கல்விகற்கும் மாணவர்களாகிய நாம் (சகல கற்கை நெறிகளும்) குடாநாட்டின் தற்போதைய உயிருக்கு உத்தரவாதம் அற்ற ஒரு சூழ்நிலை காணப்படுவதால் எமது இறுதிப் பரீட்சைக்கு எவ்வாறு சமுகமளிப்பது என்பதைப் பற்றி குழம்பிய நிலையில் உள்ளோம். எமது இறுதிப் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்கள் குடாநாட்டில் பல்வேறு பிரதேசங்களில் இருந்து கல்லூரிக்கு சமுகமளிப்பதில் பெரும் சிக்கல் உள்ளது.

போக்குவரத்துக்கள் யாழ்.குடாநாட்டில் நடைபெறும் பகிஷ்கரிப்பின் காரணமாக முற்றாக ஸ்தம்பிம் அடையும் நிலையிலுள்ளதுடன், இராணுவ சோதனை நடவடிக்கைகளும் தீவிரமாக உள்ளதுடன் கல்லூரியைச் சுற்றி இராணுவச் சோதனை நடவடிக்கைகளும் தீவிரமாக உள்ளன. எமது கல்லூரியின் படவரைஞர் கற்கைநெறி மாணவன் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழக வளாகத்திற்குள் வைத்து இராணுவத்தினராலும் பொலிஸாராலும் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டு இயல்பு நிலையில்லாத காரணத்தினாலும் கை,கால்கள் பலத்த காயமுற்ற நிலையில் இருப்பதாலும் அந்த மாணவன் இறுதிப் பரீட்சைக்கு எவ்வாறு சமுகமளிப்பது என்பது தொடர்பாகவும் நாம் குழம்பிய நிலையிலுள்ளோம்.

இவ்வாறான ஒரு சங்கடமான நிலைமை ஏனைய கல்லூரி மாணவர்களுக்கும் ஏற்படும் வாய்ப்பு இன்று உள்ளது. எனவே நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதிப் பரீட்சைகளை ஒட்டுமொத்தமாக ஒத்திவைப்பது என கல்லூரி மாணவர்களாகிய நாம் முடிவடுத்துள்ளோம்.

தேசியப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கை-513, (தொழிற்துறை, பொறியியல் துறை,வர்த்தகத் துறை) உள்ளகப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கை-419.ஆகவே,தொழில்நுட்பக் கல்லூரிக்கு வருகை தரவேண்டியுள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை கிட்டத்தட்ட 1000 ஆகும்.

யாழ்.குடாநாட்டில் நடைபெறும் அசம்பாவிதம் காரணமாக கல்வி கற்கும் மாணவர்களும் ஆசிரியர்களும் மிலேச்சத்தனமாக இராணுவத்தால் தாக்கப்படுவதால் காயப்பட்ட எமது மாணவர்கள் மனம் குழப்பிய நிலையில் உள்ளார்கள். அத்துடன், வீடுகளை விட்டு மாணவர்களும் ஆசிரியர்களும் வெளியேவர முடியாத பாரிய அச்சத்துடன் காணப்படுவதுடன் குடாநாடெங்கும் திடீர் திடீரென இராணுவத்தினர் வீதிகளில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டு மாணவர்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதல்களை நடாத்துவதாலும் எமது மாணவர்களை கண்டபடி கைதுசெய்து தாம் மாணவர்கள் என அவர்கள் அடையாளம் காட்டிய பின்னரும் மிக மோசமாகத் தாக்கப்படுவதாலும் எமது மாணவர்களின் நிலை பரிதாபகரமாக உள்ளது.

இதன் காரணமாக எமது மாணவர்கள் உளநிலை பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளனர்.

எமது இறுதிப் பரீட்சை தொடர்பாக யாழ்.தொழில்நுட்பக கல்லூரி மாணவர் ஒன்றியமும் மாணவர்களும் எடுத்த தீர்க்கமான முடிவையே வடக்கு-கிழக்கு வலயம் 04 இலுள்ள ஏனைய தொழில்நுட்ப கல்லூரிகளும் எடுத்து எமது குடாநாட்டு நிலையில் ஒரு சுமுகமான முடிவைப்பெற பூரண ஆதரவை வழங்க வேண்டும்.

எனவே, தமிழ் மாணவர்களின் எழுச்சியை வலுப்படுத்து ஒன்றுதிரண்ட தங்களின் ஆதரவையும் பங்களிப்பையும் கோரி நிற்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# வவு.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களும் காலவரையறையின்றி பகிஷ்கரிப்பில் குதிப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் தமக்கு இவ்வாண்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பரீட்சைகளையும் இவ்வாண்டுக்கான இறுதிப் பரீட்சைகளையும் இடைநிறுத்தி காலவரையறையின்றி பகிஷ்கரிப்பை மேற்கொண்டுள்ளதாக வவு னியா தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில், யாழ் பல்கலைக்கழகம், யாழ். தொழில்நுட்பக் கல்லூரி ஆகிய பகுதிகளில் இராணுவ நடமாட்டம் அதிகரித்துள்ளமை மாணவர் கற்றல் செயற்பாட்டிற்கு குந்தகம் ஏற்படுத்தியமை, மாணவர் மீதான தாக்குதல்களையும் மாணவர் தங்குமிடங்களை சோதனை செய்தமை, மாணவர் அடையாள அட்டை கிழித்தெறிந்தமை போன்ற செயற்பாடுகளைக் கண்டித்தும் மற்றும் திருகோணமலை தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தினுள் பாதுகாப்புப் படையினர் அத்துமீறி முகாம் அமைத்துள்ளமையைக் கண்டித்தும் நாம் பகிஷ்கரிப்பை மேற்கொண்டுள்ளோம்.

யாழ்.பல்கலைக்கழக மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் பூரண சுதந்திரத்துடன் தமது சுயஉரிமைகளைப் பெறுவதற்கும் அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து கல்விச் சமூகத்தின் கற்றல் செயற்பாடுகளுக்கு எந்தவொரு அச்சுறுத்தலோ இடையூறோ இல்லாது அவர்களின் பூரண கல்வி நடவடிக்கைகள் நடைபெறுவதற்கு சுமுகமான முடிவு கிடைக்கும் வரையும் மற்றும் திருகோணமலை தொழில்நுட்பக் கல்லூரியில் இருந்து இராணுவமுகாம் அகற்றப்படும் வரை அம் மாணவர்களுக்கு சுமுகமான முடிவு கிடைக்கும் வரையும் அவர்களுக்கு ஆதரவாக வவுனியா தொழில்நுட்பக்கல்லூரி மாணவர் ஒன்றியம் செயற்பட்டுக் கொண்டிருக்கும்.

அதுமட்டுமல்லாது, இறுதிப் பரீட்சை தொடர்பாக யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் எடுக் கவுள்ள தீர்க்கமான முடிவினையே நாங்களும் எடுக்கத் தீர்மானித்துள்ளோம எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# தர்சினி படுகொலையைக் கண்டித்து கனடாவில் இன்று பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் இளம் பெண் தர்சினியை ஸ்ரீலங்கா படையினர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய பின்னர் படுகொலை செய்ததைக் கண்டித்து கனடா வாழ் புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் இன்று கண்டனப் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

காலம் காலமாக தமிழீழ மண்ணில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் கோரப்பசிக்கு இரையாக்கப்பட்டு படுகொலை செய்யப்படும் இளம் பெண்களின் வரிசையில் புங்குடுதீவு மண்ணில் இரண்டாவது முறையாக தர்சினி இளையதம்பியின் படுகொலை.

19வயது நிரம்பிய தர்சினியின் படுகொலை யாரோ ஒருவருடையதல்ல. அவள் நம் குழந்தை. நம் சகோதரி. ஆகவே இதனைக் கண்டிதது உலக மனித உரிமைகள் அமைப்புகளுக்கும் கனேடிய அரசுக்கும் நாம் அனைவரும் ஒருங்கிணைந்த உரத்த குரலில் முறையிடும் முகமாக டிசம்பர் 25ஆம் திகதியனறு கனடா கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தப் பொதுக்கூட்டத்தில் அனைத்து கனடா வாழ் புங்குடுதீவு மக்கள் மற்றும் மனிதாபிமானிகள், பொதுமக்கள், ஊடகத் துறையினர், மனித உரிமையை மதிக்கும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ற)

# 'நலமாக வாழ 40 வழிகள்' நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

உளநல ஆலோசகர் கா.வைத்தீஸ்வரனின் 'நலமாக வாழ 40 வழிகள்' எனும் நூல் அறிமுகவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இணுவில் அறிவாலயத்தில் இணுவில் திருவூர் ஒன்றியத்தின் தலைவரும் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியருமான சபா ஜெயராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை இணுவில் அறிவாலயப் புரவலர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனும், யாழ். கூட்டுறவு ஐக்கிய சங்கங்களின் சமாசத் தலைவர் பெ.கனக சபாபதியும் வழங்கவுள்ளனர்.

ஆசிரியர் என்.விஜயசுந்தரம் வெளியீட்டுரையையும், உலக உணவு ஸ்தாபனத்தின் ஆலோசகர் டாக்டர் என.சிவராசா ஆய்வுரையையும், யாழ்.பல்கலைக்கழக முதுநிலை நூலகர் ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் நூல் விமர்சனத்தையும் வழங்கவுள்ளனர். (ற-7)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



உன்னை இகழும் மக்களை நீ வாழ்த்து . அவர்கள் உனக்கு நன்மை செய்வதாக நினைத்துக கொள் . உனக்கு தீங்கு செய்பவர்கள் தங்களுக்குத் தாங்களே தீங்கு விளைவித்துக் கொளகிறார்கள். உன்னை வெறுக்கும் மக்களிடம் ந செல். உன்னிடம் இருக்கும் அகந்தையை அவர்கள் அடித்துத் துரத்தட்டும். அது உன்னை இறைவனுக்கு அருகில் அழைத்துச் செல்லும்.

சுவாமி விவேகானந்தர்

## வடக்கு கிழக்கு நிலைமைகள் குறித்து கட்சிகள் அவசரமாகக் கூடி ஆராய்வு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் இடையே நேற்று சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. நேற்றுக்காலை அலரி மாளிகையில் இச்சந்திப்பு இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். வடக்கு கிழக்குப் பகுதிகளில் அண்மை நாட்களாக இடம்பெற்று வரும் நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காகவே இச்சந்திப்பு இடம்பெற்றதாக தெரிவிக்கப் பட்டது.

இதேவேளை வடக்கு- கிழக்கில் பாதிக்கப் பட்ட முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளின் குழுவொன்று ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்றுள்ளது. இச்சந்திப்பின்போது இனப்பிரச்சினையில் பாதிக்கப்பட்ட ஒரு இலட்சம் முஸ்லிம் மக்களின் கையொப்பம் அடங்கிய மகஜர் ஒன்றும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இம் மகஜரின் பிரதியொன்றும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபிஅனானிடம் கையளிக்க நடவடிக்கையெடுக்கப்பட்டுவருவதாக முஸ்லிம் பிரதிநிதிகள் குழு தெரிவித்துள்ளது. (ச-8)

### இராணுவத்தினர் மீது...

கூறப்பட்ட போதும் அத்தகவலை உறுதி செய்யவில்லை. இதேவேளை சாவகச்சேரியில் இராணுவத்தினர் பாதுகாப்பைப்பலப்படுத்தியுள்ளனர். வீதிகளில் செல்வோரும் தீவிரசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். (ச-8,74)

### ஐஸ்கிறீம் வான்...

சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பூரண விசாரணையை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி சரோஜினி இளங்கோவன் இளவாலைப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை சம்பவத்துடன் தொடர்புடைய ஐஸ்கிறீம் வானின் சாரதி இளவாலைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (ச-58)

### கண்காணிப்புக்குழுவின்...

அது மிகவும் மோசமானது. யாழ்ப்பாணத்தில் நடைபெறும் அனைத்து ஆர்ப்பாட்டங்களுக்கும் சில இளைஞர்கள்தான் முன்னிலை வகிக்கின்றனர்.

அவர்களை அடையாளம் கண்டு உடனே கைதுசெய்யவேண்டும். வடக்கு- கிழக்கில் இராணுவத்தினர் அமைதியற்ற சூழலை உருவாக்கியுள்ளனர். அவர்கள் கண்காணிப்புக்குழுவினரது பாதுகாப்பிலும் அக்கறை கொள்ளவில்லை.

கண்காணிப்புக்குழுவினர் மீதும் கைக்குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. எமது வாகனத்தொடரணியும் தாக்கப்பட்டுள்ளது. கண்காணிப்புக்குழுவின் பாதுகாப்பிற்கு சர்வதேச நாடுகளின் உதவியைக் கோரமாட்டோம்.

இராணுவத்தினரே 100 வீதம் பாதுகாப்பு அளிக்கமுடியும். தற்போதைய நிலைமைகளைச்சீராக்க விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் மேல்மட்டத்திலும் கீழ்மட்டத்திலும் உடனடியாக பேச்சுக்கள் நடத்தவேண்டும். அண்மைய படையினர் மீதான தாக்குதல்களுக்கு யார் காரணம் என்பதை உறுதியான ஆதாரங்கள் இன்றி முடிவுக்கு வர இயலாது என்றார் ஹக்றூவ் ஹொக்லண்ட். (ச-8)

## இராணுவத்தின் துப்பாக்கிச்...

நேற்று மாலை 5.30 மணியளவில் யாழ்.பொது நூலகத்துக்கருகில் கண்டி வீதியில் இராணுவத்தினர்மீது கைக்குண்டு, துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டதாகவும் அதனையடுத்து இராணுவத்தினர் திருப்பிச் சுட்டதில் பெண் ஒருவர் உட்பட ஐவர்துப்பாக்கிச் சூட்டிற்கு மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அவர்களின் சடலங்கள் அப்பகுதியில் ஆங்காங்கே காணப்பட்டதாகவும் அச் சடலங்களுக்குஅருகில்ஆயுதங்கள் காணப்பட்டதாகவும் இராணுவத்தின் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கிடப்பதாகவும் இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இறந்தவர்கள் 20ற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்ட வயதுடையவர்கள் என கூறப்படுகின்றது. இறந்தவர்களின் ஒருவரிடம் இருந்த ஆவணம் ஒன்றின்படி அவர் குரும்பசிட்டி தெல்லிப்பழையைச் சேர்ந்த திருநாவுக்கரசு காந்தன் என்றும் இன்னொருவர் மிருசுவிலைச் சேர்ந்த விமலேஸ்வரன் என்றும் தெரியவந்துள்ளதாக பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மரணமான பெண் நீலநிறமுடைய நீளக்காற்சட்டையும் ரீசேட்டும் அணிந்திருப்பதாக வைத்தியசாலைச் செய்திகள் தெரிவித்தன.

நேற்றிரவு சம்பவ இடத்துக்குச் சென்ற மல்லாகம் மாவட்ட நீதிவான் சறோஜினி இளங்கோவன் சம்பவ இடத்தைப் பார்வையிட்டதுடன் சடலங்களை அடையாளம் காணும் பொருட்டு யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். இதனையடுத்து நேற்றிரவு11மணியளவில் சடலங்கள்யாழ்.போதனாவைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டு அடையாளம் காணும் பொருட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை கிரனைட் தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர்.அவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக இராணுவ ஹெலிகொப்டர் மூலம் பலாலிக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இச் சம்பவம் இடம் பெற்ற வேளையில் யாழ்.நகரையண்டிய பகுதிகளில் இருந்து பரவலாக துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்ட வண்ணம் இருந்தது. இதனையடுத்து மக்கள் மத்தியில் பீதி ஏற்பட்டுள்ளது.(ச-8)

## நோர்வேயிலேயே முதற் கட்டப் பேச்சு...

இணைத் தலைமை நாடுகள் என்று சொல்லப்படுகின்ற யப்பான், ஐரோப்பிய ஒன்றியம்,நோர்வே, பிரித்தானியா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் உள்ளடங்கிய தூதுக்குழு எங்களிடம் வருகை தந்து தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் பற்றி தீவிரமாக கரிசனை செலுத்தி கலந்துரையாடியதாக தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

அவர்களுடனான சந்திப்பினை முடித்துக் கொண்டு ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையினை எப்படி சீர்செய்வது என்பது பற்றியும் மக்களுடைய கொந்தளிப்பான நிலைமையைத் தணித்து இயல்பு நிலையை எப்படி கொண்டு வரலாம் என்பது பற்றியும் சீர்குலைந்துள்ள யுத்த நிறுத்த சூழலை எப்படி சீர்படுத்தலாம் என்பது பற்றியும் தூதுக்குழுவினரின் அக்கறை இருந்தது. தகுந்த தெளிவான விளக்கத்தை தூதுக்குழுவிற்குத் தெரிவித்துள்ளோம்.

அண்மைக்காலமாக தமிழ் மக்கள் மீது இராணுவம் கட்டவிழ்த்து விட்டுள்ள கடுமையான வன்முறைச் சம்பவங்களை உடனடியாக முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.மக்கள் கொல்லப்படுவதும் தாக்கப்படுவதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

மக்கள் போராட்டங்களை இராணுவத்தைக் கொண்டு அடக்கியமை பெரியளவில் வன்முறை வெடிக்க காரணமாக இருந்தது. முக்கியமாக பல்கலைக்கழக மாணவர்கள்,உபவேந்தர்,பேராசிரியர்கள் தாக்கப்பட்டதும் சுட்டுக் காயப்படுத்தப்பட்டதும் மக்கள் கொல்லப்படுவதும் படைக்கும் மக்களுக்குமிடையே முறுகல் நிலை யை தீவிரமாக்கியது.

இந்த நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதனால் உடனடியாக யுத்த நிறுத்த உடன்பாட்டை முழுமையாக அமுலாக்கம் செய்ய வேண்டும். யுத்த நிறுத்த அமுலாக்கம் என்பது எல்லா விதத்திலும் மக்களுக்கு நல்லதைச் செய்கின்ற இயல்பு நிலையைக் கொண்டு வருகின்ற இரு தரப்பும் ஏற்றுக் கொண்ட சரத்துக்களைக் கொண்டது.

யுத்த நிறுத்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.இதற்கு சர்வதேச சமூகம் உதவவேண்டும் என்றார். அரசாங்கம் முன்நிபந்தனைகளை விதித்து யுத்த நிறுத்த அமுலாக்கப் பேச்சுவார்த்தைகளை இழுத்தடிப்பதைத் தவிர்க்க வேண்டும் என்பதை இச்சந்திப்பில் விரிவாக விளக்கப் பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள பதற்றமான சூழலை கருத்தில் எடுத்து நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இணைத் தலைமை நாடுகள் உடனடியாக வருகை தந்து எம்மைச் சந்தித்து கருத்துக்களை அறிய முற்பட்டமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

அடுத்த கட்ட நகர்வுகளை செய்வதற்கு பல ஆலோசனைகளை வழங்கியமைக்கு நன்றி தெரிவிக்கின்றோம். இவ் விடயங்களில் அரச தரப்பு எவ்வளவு தூரம் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரும் என்பதுதான் இன்றைய நிலையில் கேள்வியாக உள்ளது என தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

யப்பானியத் தூதுவர் கூட வந்திருந்தார். எமது நிலைப்பாட்டை யப்பான் தூதுவருக்கும் எடுத்து விளக்கினோம். யப்பானில் பேச்சுவார்த்தை நடத்துவது என்பது எமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை.இருந்தாலும் நோர்வே அனுசரணைப் பணியை வழங்குவதாலும் அமைதி முயற்சிகளில் நோர்வே மிக முக்கிய பங்கை விகிப்பதாலும் நோர்வே நாட்டிலேதான் முதல் கட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்துவது பொருத்தமாக இருக்கும்.

நோர்வேயின் அனுசரணையை எல்லோரும் ஏற்றுக் கொண்ட நிலையில் நோர்வே ஒரு நடுநிலையான பொருத்தமான இடம். முதற் கட்ட பேச்சுவார்த்தைகளை நோர்வேயில் நடத்துவதை எமது மக்களும் எமது தலைமைப் பீடமும் விரும்புகின்றது.

முக்கியமாக பேச்சுக்கள் யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக இருக்க வேண்டும். யுத்த நிறுத்தத்தை அமுலாக்கம் செய்வதன் ஊடாக எமது மக்களை ஓரளவு அமைதிப்படுத்தலாம்.

மக்கள் மீது இராணுவம் நெருக்குவாரங்களைக் கட்டவிழ்த்து விட்டு மக்களை அமைதிப்படுத்த முயன்றால் அது ஒரு போதும் வெற்றியளிக்காது. இந் நிலைமைகளைச் சுட்டிக்காட்டி நோர்வேயில்தான் பேச்சுக்களை நடத்தப்பட வேண்டும் என்பதை இன்றைய சந்திப்பில் ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளோம். இதனை சிறிலங்கா அரசிற்கும் மற்றும் அனைத்துத் தரப்புக்கும் எடுத்துச் செல்வார்கள் என நம்புகின்றோம் என்றார்.

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பில் அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இரண்டாவது கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளதே "என்ற போது, இது வரை அவ்வாறான கடிதம் ஒன்றும் வரவில்லை. இன்று வருகை தந்த இணைத்தலைமை நாடுகளின் தூதுக்குழுவினர் யப்பானில் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் விரும்புவதாக தெரிவித்தனர்.

அதனை நாங்கள் நிராகரித்துள்ளோம். நோர்வேயில் முதற்கட்ட பேச்சுவார்த்தைகளை தொடங்கி அடுத்த கட்ட பேச்சுக்களை யோசிக்கலாம். அவசரமாக யுத்த நிறுத்த அமுலாக்கத்தில் எல்லோரும் கரிசனை கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம் என்றார்.

இதேவேளை இணைத்தலைமை நாடுகளில் புதிதாக எவரையும் இணைத்துக் கொள்வது பற்றி எந்த நாடும் உத்தியோகபூர்வமாக கருத்தை முன்வைக்கவில்லை. ஆனால் இந்தியாவை உள்ளடக்குவது குறித்து ஊடகங்கள்மூலமாக மட்டுமே அறிகின்றோம்.

மன்னாரில் நேற்று நடைபெற்ற தாக்குதலுக்கு அரசு விடுதலைப்புலிகள் மீது குற்றம் சாட்டியுள்ளது.

இதை நாம் முற்றாக மறுக்கின்றோம். ஏனெனில் அண்மைக்காலமாக இராணுவம் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில், பொதுமக்கள் வயது வேறுபாடின்றி தாக்கப்படுகின்றார்கள், கொல்லப்படுகின்றார்கள். வன்முறைகள் மிகப் பரந்தளவு கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இதன் எதிர்வினையாக படையினருக்கும் மக்களுக்கும்மத்தியில் மோதல்கள் நடைபெறுவதன் விளைவாக இவை நடந்திருக்கலாமே தவிர இதனை விடுதலைப்புலிகள் செய்ய வேண்டிய தேவையில்லை எனக் கூறினார்.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையைத் தவிர்ப்பதற்காகவே இணை தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் தன்னை சந்தித்ததாக தமிழச்செல்வன் மேலும் கூறினார். (ச-8)















இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.12.2005 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.